Kanton Graubünden
Chantun Grischun
Cantone dei Grigioni

# WILLKOMMEN
# BAINVEGNI
# BENVENUTI

புதிதாகக் குடியேறுபவர்களுக்கான தகவல்கள்



# புதிதாகக் குடியேறுபவர்களுக்கான தகவல்கள்

**Fachstelle Integration Graubünden**
கிறவ்புன்டன Graubünden ஒருங்கிணைப்புத் துறை
www.integration.gr.ch
www.hallo.gr.ch

# உள்ளடக்கம்


1 **Allegra, Grüezi, Buongiorno** **9**

2 சுவிட்சர்லாந்து பற்றிய தகவல் **10**
சுருக்கமான வரலாறு மற்றும் வாழ்வுரிமை

3 கிறவ்புன்டன் Graubünden மாகாணம் பற்றிய தகவல்கள் **12**
ஆதாரங்கள் மற்றும் புள்ளி விவரங்கள

4 கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் பன்மொழி கலாசாரம் **14**

5 ஒருங்கிணைப்பு **17**
ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம் Graubünden
பல மொழிகளிலான தகவல் தளம் www.hallo.gr.ch

6 தகவல் தொடர்பு **19**
மொழி, வெற்றிகரமான ஒருங்கிணைப்புக்கான திறவுகோள்
மொழிபெயர்ப்பாளர் சேவை

7 பணி **20**
பணி சார்ந்த ஒருங்கிணைப்பு
ஊதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புகள்
வேலை தேடுதல்
வேலையில்லையா - இப்போது என்ன செய்வது?
சட்டவிரோத வேலைவாய்ப்புகள்
அடிப்படை மற்றும் மேற்பயிற்சி
வெளிநாட்டு பட்டயங்களுக்கு அங்கீகாரம்

8 வசிப்பிட அனுமதி கணவன், மனைவி மற்றும் குழந்தைகளுக்கான வசிப்பிட அனுமதிகள் **24**

9 திருமணம் மற்றும் குடும்பம் 25
திருமணம்
இரு மொழிச் சோடிகள் மற்றும் குடும்பங்கள்
வாழ்வியல் உறவுமுறைகள்
கட்டாயத் திருமணம்
பிறப்பு
பேறுகால விடுமுறை மற்றும் பேறுகால ஊதியங்கள
குடும்ப உதவித்தொகைகள்

10 குழந்தைகள 28
பலமொழிகளிகளுடன் வளர்தல்
பெற்றோர் ஆலோசனை நிலையம்
குடும்ப- மற்றும் பெற்றோர்- Apps
புத்தகங்கள் மற்றும் விளையாட்டுக்களை இரவலாகப் பெற்றுக்கொள்வது
பராமரிப்பு வசதிகள
பெற்றோர்க்கான அவசர அழைப்பு

11 பள்ளி மற்றும் பணி சார்ந்த பயிற்சி 30
பெற்றோருக்கான பொறுப்புகள்
இளைஞர்களுக்கான கட்டணமில்லா வாழ்க்கைத்தொழில் சேவை
மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தொழில்முறைப்பயிற்சி
இணைப்புப்பால வசதிகள்
தாமதமாகக் குடியேறிய இளையோர்கள்
இலக்கணப் பள்ளிகள், வணிக மற்றும் சிறப்பு இடைநிலைப் பள்ளிகள்பொதுப் பள்ளிகள்
தொழில்முறைப் பணிப் பழகு பயிற்சி
தொழில் உயர்கல்வி
மூன்றாம் நிலை பிரிவில் அடிப்படை மற்றும் மேற்பயிற்சி
பள்ளி உளவியல் சேவை
கிறவ்புன்டன் Graubünden மாகாணக் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான உளவியல் சிகிச்சை
குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள்

12 வீட்டுவசதி 35
அடுக்குமாடி குடியிருப்பு விளம்பரங்கள்
வாடகைதாரர் சட்டத்துக்கான ஆலோசனை மையம்

13 சுகாதாரம் 38
மருத்துவர்களின் முகவரிகள்
உடல்நலக் குறைவு அல்லது விபத்து
மருத்துவமனை
ஆலோசனை மற்றும் பராமரிப்பு வீட்டில் ஆதரவு
வயோதிபர்கள்
உடல் ஊனம் உள்ளவர்கள்
உளவியல் பிரச்சினைகளைக் கொண்டிருப்பவர்கள்

14 காப்பீடுகள் 40
கட்டாயக் காப்பீடுகள்
அடிப்படை மருத்துவக் காப்பீட்டு
மருத்துவக் காப்பீட்டுக் கட்டணத்தில் தள்ளுபடி
விபத்துக் காப்பீடு
சுயவிருப்பக் காப்பீடுகள்

15 வரிகள் 42

16 சமூகக் கலந்தாய்வுச் சேவைகள் மற்றும் சமுதாய நன்மைகள் 43
தனிநபர் சமூகக் கலந்தாய்வு
பொருளாதார சமூக உதவி

17 அன்றாட - சமூக வாழ்க்கை 44
நகர வாழ்க்கை, கிராம வாழ்க்கை
சங்கங்கள் சமுதாயங்கள் மற்றும் மன்றங்கள்
வெளிநாட்டவரின் சங்கங்கள் மற்றும் சமுதாயங்கள்
அருங்காட்சியங்கள் அரங்கங்கள் மற்றும் திரையரங்குகள்
பொருட்களை வாங்குதல்
வங்கிகள்
பொது விடுமுறை நாட்கள்
சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு

18 இடம் பெயர்தல் 47
பொதுப் போக்குவரத்து: இரயில் மற்றும் பேருந்து
சுவிட்சர்லாந்தில் கார் ஓட்டுதல்
மிதிவண்டி

19 சுற்றுச்சூழல் 50
சுற்றுச்சூழலை பாதுகாக்கவும்!
கழிவு
குடிநீர்

20 பயன்தரும் முகவரிகள் மற்றும் இணையத் தொடர்புகள் 52
நாளாந்த வாழ்வுப் பிரச்சினைகள்
தொழில
ஒதுக்குதல்/இனவெறி
குடும்பம் மற்றும் உறவுமுறைகள்
நிதியுதவிகள்
உடல் நலம்
வன்முறை/பாதிக்கப்பட்டோருக்கான உதவி
ஒத்துழைத்து முன்னேற்றுதல/குடியேறுதல்
பல்கலாச்சார மொழிபெயர்ப்பாளர்
பிள்ளைகள் மற்றும் இளையோர்
குடியேற்றவாசிகளின் ஊடகங்கள்
சமூக சேவைகள்
மொழிப் பள்ளிகள்
சட்டம

21 ஒரு அவசர நிலையில் என்ன செய்வது 64

சட்ட அறிக்கை 66



# ALLEGRA, GRÜEZI, BUONGIORNO

அன்பான பெண் குடிவரவாளர்களே மற்றும் ஆண் குடிவரவாளர்களே

Bündner ஆட்சியாளர்களின் பெயரால் நான் உங்களை எமது மாநிலத்திற்கு இதயபூர்வமாக வரவேற்கின்றேன்.

நீங்கள் எமது மாநிலத்தை வசிப்பதற்காகத் தேர்ந்து கொண்டதால் தற்போது நீங்களும் எமது பன்முக சமூகத்தின் பகுதியாகியுள்ளீர்கள், இது பல எண்ணிக்கையான மக்கள் குழுவின் ஒன்றிணைப்பாகும். இவர்கள் மொழி, தாயகம் மற்றும் பாரம்பரியங்கள் போன்றவைகளால் மட்டுமல்ல, மாறாக வயது, தொழில், விருப்பங்கள் மற்றும் பல்வேறு வகையானவைகளால் வித்தியாசப்படுகின்றனர். ஆகவே பல்வேறு வகையானவர்களுடன் வாழ்வது Graubünden இல் வழக்கமானது என்பதுடன் இதனால் நல்ல சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுடன் சவால்களையும் எதிர்கொள்ளச் செய்கின்றது.

Graubünden பலவிதமானது என்பதுடன் உங்களுக்கு பலவற்றை வழங்கிக்கொள்ளும். அதாவது எமது இயற்கை நிலவளத்தில் 150 பள்ளத்தாக்குகள், 615 நீர் ஏரிகள், 937 மலை உச்சிகள் அடங்கியுள்ளன. எமது உத்தியோகபூர்வ மொழிகளாக டொச், றெற்றோறொமானிஸ் மற்றும் இத்தாலியம் உள்ளன. உங்களுக்குத் தெரியுமா, சுவிசில் றெற்றோறொமானிஸ் Graubünden இல் மட்டும் பேசப்படுகின்றதென்பது, இது ஒரு மொழி மட்டும் அல்ல, மாறாக 5 இனக் குடும்பங்களின் மரபுச் சொற்தொடர்கள் அடங்கியதென்பது: Sursilvan, Sutsilvan, Surmiran, Puter மற்றும் Vallader? நாங்கள் எமது நூற்றாண்டுகால பழமைவாய்ந்த பாரம்பரியங்கள் மற்றும் வழக்கங்கள் குறித்துப் பெருமைப்படுகிறோம், அதேவேளையில் நாங்கள் நவீனமயமான எதிர்ப்பக்கத்தையும் பற்றிப்பிடித்துள்ளோம் என்பதுடன் உங்களுடன் ஒன்றிணைந்து எமது சமூகத்தின் எதிர்காலத்தை வளப்படுத்த விரும்புகிறோம்.

பல முயற்சிகள் மற்றும் திட்டங்கள் மாநிலத்தில் - இதன்கீழ் பலவகையான ஒத்துழைத்து முன்னேற்றும் வசதி வாய்ப்புகள் - சமூக ஒற்றுமையை இறுக்கமாக்கும் வகையாக அமைகின்றன. ஒன்றிணைந்தே நாம் பலமாவோம் ஆகவே இக் கருத்தின்படி எமது சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார வாழ்வில் பங்கெடுத்துக்கொள்ளுமாறு உங்களை அழைக்கிறோம்.


தற்போதுள்ள தகவலகள-, ஆலோசனை-, மற்றும் கற்கும் வசதிகள் குறித்து உஙக் ள் நகரசபையில் அல்லது ஒத்துழைத்து முன்னேற்றும் மாநில துறைசார் நிலையத்தில் நீங்கள் கேட்டறிந்து கொள்ளுங்கள். இவற்றைப் பாவிப்பதுடன் இதிலிருந்து வளர்ச்சி பெறும் சந்தர்ப்பங்களால் இலாபமடைந்து கொள்ளுங்கள்.


உங்கள் புதிய நாட்டில் ஒரு நல்ல ஆரம்பம் அமைய நாங்கள் வாழ்த்துகின்றோம்.

**Peter Peyer**
ஆட்சியாளர் அவை

# 2

# சுவிட்சர்லாந்து பற்றிய தகவல்






## புள்ளி விவரம் (2019)

| | |
|---|---|
| மக்கள் தொகை | 8‘606‘000 |
| அயல் நாட்டினர் | 25.3 % |
| பரப்பளவு | 41 300 சதுர கி.மீ. |
| மாகாணங்கள் | 26 |

## சுருக்கமான வரலாறு மற்றும் வாழ்வுரிமை

1291ம் ஆண்டு, ஆகஸ்ட் 1ம் தேதி, ஊறி Uri ஸ்விஸ் Schwyz மற்றும் உன்ரவால்டன் Unterwalden ஆகிய பள்ளத்தாக்கு நகராட்சிகள் இணைந்த பழைய கூட்டமைப்பு நிறுவப்பட்டது. இதனுடன் மற்ற நகராட்சிகள் மற்றும் பகுதிகள் பின்னர் இணைந்து கொள்ள, 1848ல் நவீன சுவிட்சர்லாந்து கூட்டாட்சி மலர்ந்தது. சுவிட்சர்லாந்தில் ஆகஸ்ட் 1ம் தேதி தேசிய விடுமுறை நாளாகும்.

சுவிட்சர்லாந்து ஒரு நேரடி குடியரசாகும். இங்கு ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை உள்ளது. தேர்தல் மூலமாக மட்டுமல்லாது, சட்டங்கள் மற்றும் பிரச்சினைகள் மீது அடிக்கடி நடத்தப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகளிலும் அனைவரும் பங்கேற்று, அரசியலில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்த முடியும். தேசிய, மாகாண மற்றும் நகராட்சி அளவிலும் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கேற்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. 18 வயது பூர்த்தியான சுவிட்சர்லாந்து குடிமக்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெறுகின்றனர்.

பிரதான மொழி(கள்)

**61.2 %**
ஜெர்மன

**22.3 %**
பிரெஞ்சு

**8.0 %**
இத்தாலியன

**0.5 %**
ரோமானிஸ் மொழி

**23.8 %**
பிற மொழிகள்

(BFS 2017)

சுவிட்சர்லாந்து வாழ்வுரிமை பற்றி மேலும் அதிகமான தகவல்களை „Echo“ என்ற கையேட்டில் நீங்கள் காணலாம். அனைத்து புத்தகக் கடைகளிலும் இது கிடைக்கிறது அல்லது பின்வரும் முகவரியிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்

**HEKS, Regionalstelle Ostschweiz**

✆ 071 410 16 84
www.echo-ch.ch

3


# கிறவ்புன்டன் Graubünden மாகாணம் பற்றிய தகவல்கள்



## ஆதாரங்கள் மற்றும் புள்ளி விவரங்கள (2019)

கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில் 199'000க்கும் அதிகமான மக்கள் வசிக்கின்றனர். இதில் சுமார் 37,300 பேர் வெளிநாட்டவர். 7,106 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட கிறவ்புன்டன் Graubünden சுவிட்சர்லாந்தின் மிகப் பெரிய மாகாணமாக விளங்குகிறது. சுவிட்சர்லாந்தின் மொத்த பரப்பில் இது 1/6 பங்காகும். மாகாணத்தின் பிரதான நகரமாக விளங்கும் கூர் சுவிட்சர்லாந்தின் பழமையான குடியேற்றப் பகுதிகளில் ஒன்றாகும். இங்கு சுமார் 35,400 பேர் வசிக்கின்றனர்.

மாநிலம் 11 பிராந்தியங்களாகவும் 106 கிராமசபைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. 50 நகராட்சிகளில் 1000க்கும் குறைவானவர்களே வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




| | |
|---|---|
| பள்ளத்தாக்குகளின் எண்ணிக்கை | 150 |
| ஏரிகளின் எண்ணிக்கை | 615 |
| மலைச் சிகரங்களின் எண்ணிக்கை | 937 |

மேலும் அதிகமான தகவல்களை www.gr.ch இணையதளத்தில் பெறலாம்.

4

# கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் பன்மொழி கலாசாரம்




கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் மொழிகள்

- ஜெர்மன்
- ரோமானிஸ் மொழி
- இத்தாலியன்

கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில் 3 ஆட்சி மொழிகள் உள்ளன: ஜெர்மன் ரோமானிஸ் மொழி மற்றும் இத்தாலியன்.

ஜெர்மன
மாகாணத்தில் வசிக்கும் பெரும்பாலானவர்களின் உள்ளூர் மொழியாக ஜெர்மன் விளங்குகிறது அதாவது இவர்கள் தூய ஜெர்மன் மொழியில் எழுதுகின்றனர் மற்றும் சுவிஸ் கலந்த ஜெர்மன் மொழியில் பேசுகின்றனர்.

ரோமானிஸ் மொழி Rätoromanisch
எங்கடின் Engadin முன்ஸ்டர் பள்ளத்தாக்கு Münstertal மத்திய கிறவ்புன்டன் Graubünden மற்றும் சுர்செல்வாவில் Surselva ரோமானிஸ் மொழி பொதுவான மொழியாக விளங்குகிறது. ரோமானிஸ் மொழி ஒரு மொழி மட்டுமல்ல; சுர்சில்வான் சுட்சில்வான் சுர்மிரான் புட்டர் மற்றும் வல்லாடர் ஆகிய 5 பழமொழித் தொகுப்புகளின் குடும்பமாகவும் விளங்குகிறது. Sursilvan, Sutsilvan, Surmiran, Puter மற்றும் Vallader.

இத்தாலியன்
Puschlav, Bergell, Misox மற்றும் Calanca ஆகிய நான்கு பள்ளத்தாக்குகளில் இத்தாலிய மொழி பேசப்படுகிறது.



# ஒருங்கிணைப்பு

ஒருங்கிணைப்பு என்பது தனிப்பட்ட மற்றும் சமூகத்துக்கான ஒரு சக்திவாய்ந்த செயல்பாடு ஆகும். இது அனைத்து தரப்பு மக்களின் சமூகப் பொருளாதாரத் தேவைகள் உரிமைகள் மற்றும் நோக்கங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவின் அடிப்படையிலானது. ஒருங்கிணைப்பை உருவாக்குவது சவால் மற்றும் ஊக்கம் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது மற்றும் மொழியைக் கற்பது தொழில்முறை முன்னேற்றம் மற்றும் சமூகப் பங்கேற்பை இது ஆதரிக்கிறது.

ஒருங்கிணைப்புத் துறை மாகாணம் மற்றும் நகராட்சி அளவில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி நிர்வகிக்கிறது. மொழி சார்ந்த மற்றும் சமூக ஒருங்கிணைப்புத் திட்டங்களை செயல்படுத்தி ஆதரிப்பதுடன் ஒருங்கிணைப்புக்கான தகவல்களைத் தருவதையும் இந்த துறை மேற்கொள்கிறது.

**Fachstelle Integration Graubünden**
கிறவ்புன்டன் Graubünden ஒருங்கிணைப்புத் துறை

✆ 081 257 26 38
www.integration.gr.ch

## ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம் Graubünden

Grabenstrasse 1 Chur ல் உள்ள ஒத்துழைத்து முன்னேற்றும் நிபுணத்துவ நிலையக் கட்டிடத்தினுள், ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம் அமைந்துள்ளது, அது பின்வரும் வசதிகளை வழங்குகின்றது:

- ஒத்துழைத்து முன்னேற்றுதல் சம்பந்தமான விடயங்கள் மற்றும் சுலபமான முன்னேற்றத்துக்குத் தேவைப்படும் ஆலோசனைகள் அதற்குத் தேவையான தகவல் பரிமாற்றம் மற்றும் சிறிய அளவிலான கேள்வி விபரங்கள்
- மாநிலத்தில் உள்ள மொழிப் பாடத்திட்டம்- மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றும் வசதிகளை அறிந்து கொள்வது
- நேரடியான மற்றும் தனிப்பட்ட மொழி சம்பந்தமான ஆலோசனை அத்துடன் மொழி அறிவைத் தெரிந்துகொள்வதற்கான பரீட்சை ஒன்றை செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம்

**Informationszentrum Integration Graubünden**
த்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம் Graubünden

✆ 081 257 36 83
திறந்திருக்கும் நேரங்கள் குறித்த விபரங்களை www.integration.gr.ch ல் காணலாம்

பல மொழிகளிலுள்ள இணையதளத்தின் www.hallo.gr.ch என்ற பக்கத்தில Graubünden இல் அன்றாட வாழ்க்கை எவ்வாறு உள்ளது, தொழில், பாடசாலை, சுகாதாரம் மற்றும் வசித்தல் போன்ற பயனுள்ள தகவல்களை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

www.hallo.gr.ch



# தகவல் தொடர்பு

## மொழி, வெற்றிகரமான ஒருங்கிணைப்புக்கான திறவுகோள்

நீங்கள் உங்கள் புதிய வதிவிடத்தில் ஊக்கம் மற்றும் சம உரிமையுடன் பொருளாதார, கலாச்சார மற்றும் சமூக வாழ்வில் பங்கேற்க விரும்புகின்றீர்களா? உள்ளூர் மொழியை நன்கு தெரிந்திருந்தால் இதற்கான கதவு உங்களுக்குத் திறந்துகொள்ளும். ஒரு மொழி வகுப்பிற்கு செல்வதுடன் மொழி- Apps ஐ நீங்கள் பாவித்துக் கொள்ளுங்கள், இதன்மூலம் நீங்கள் நாளாந்த வாழ்வு குறித்து நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

மாநிலத்தில் உள்ள மொழி வகுப்புகளின் பட்டியல் ஒன்றை "பயன்தரும் முகவரிகள் மற்றும் இணையத் தொடர்புகள்" எனும் தலைப்பின் உள்ளே நீங்கள் காணலாம். இதன்போது www.integration.gr.ch எனும் இணையத்தளம் தற்போதுள்ள மொழிவகுப்பு வசதிகள் குறித்த விபரங்களை வழங்குகின்றது. மொழி கற்பது குறித்த அல்லது ஒரு தனிப்பட்ட மொழி ஆலோசனை குறித்த மேலதிக தகவல்களுக்கு ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**Informationszentrum Integration Graubünden**
ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம் Graubünden

✆ 081 257 36 83
திறந்திருக்கும் நேரங்கள் குறித்த விபரங்களை www.integration.gr.ch ல் காணலாம்

## மொழிபெயர்ப்பாளர் சேவை

உள்ளூர் மொழியைக் கற்றுக்கொள்வது முக்கியமானதாகும். முக்கிய உரையாடல்கள் மற்றும் பேச்சுவார்த்தைகளைக் கண்நோக்கினால், அவற்றை நன்கு விளங்கிக்கொள்வதற்கு, பல்கலாச்சாரம் அறிந்த ஒரு ஆண் அல்லது பெண் மொழிபெயர்ப்பாளரை உதவிக்கு அழைப்பது அவசியமானதாகும்.

Arge Verdi – Interkulturelles Dolmetschen in der Ostschweiz (கிழக்கு சுவிசில் பல்கலாச்சாரம் அறிந்த மொழிபெயர்ப்பாளர் அமைப்பு) தகுதிவாய்ந்த பல்கலாச்சாரம் அறிந்த மொழிபெயர்ப்பாளர்களை ஏறத்தாழ 60 மொழிகளில் அறியத்தருவார்கள். இந்தச் சேவை கட்டணத்துக்குரியது.

**Arge Verdi – Interkulturelles Dolmetschen in der Ostschweiz**
கிழக்கு சுவிசில் பல்கலாச்சாரம் அறிந்த மொழிபெயர்ப்பாளர் அமைப்பு

✆ 0848 28 33 90
www.arge.ch/verdi

தொலைபேசி மொழிபெயர்ப்புச் சேவை, சிறிய நிமிட இடைவெளிக்குள் தகுதிவாய்ந்த ஆண் அல்லது பெண் மொழிபெயர்ப்பாளர்களை வழங்குகின்றது - சில மொழிகளில் எந்த வேளையிலும், அனைத்து 365 நாட்களிலும். இந்தச் சேவை கட்டணத்துக்குரியது.

**Telefondolmetschdienst**
தொலைபேசி மொழிபெயர்புச் சேவை

✆ 0842 442 442
www.0842-442-442.ch

# பணி

## பிறர் தங்கள் விடுமுறையைக் கழிக்கும் இடங்களில் பணி செய்தல்!

கிறவ்புன்டன் Graubünden மாகாணம் சர்வதேச அளவில் நீண்ட கால பாரம்பரியம் கொண்டது. வருவாய் அதிகம் தரக்கூடிய ஒரு துறையாக சுற்றுலாத் துறை ஆதிக்கம் செலுத்துகிறது. அத்துடன் சுகாதாரம் சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான ஏராளமான நிறுவனங்கள் மாகாண நிர்வாகம் என பல்வேறு வகையிலும் பலதரப்பட்ட தொழில் சார்ந்த கவர்ச்சிகரமான வேலை வாய்ப்புகள் இங்கு கிடைக்கின்றன.

## பணி சார்ந்த ஒருங்கிணைப்பு

வேலை வாய்ப்பு மக்களின் நல்வாழ்க்கையை உறுதி செய்வதுடன் சமூக ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துகிறது. பணி அனுமதி மற்றும் உள்ளூர் மொழியை அறிந்திருப்பது வேலையில் சேர்வதற்கான அடிப்படை தேவையாக உள்ளது. அத்தியாவசியமான வசிப்பிட அனுமதிகள் மற்றும் வேலை வாய்ப்பு பற்றிய தகவல்களை பின்வரும் இணையதளங்களில் நீங்கள் பெறலாம்.

www.kiga.gr.ch
www.afm.gr.ch
www.sem.admin.ch
www.swissuni.ch
www.berufsberatung.ch
www.migraweb.ch

## ஊதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புகள்

முதியோர் மற்றும் ஆயுள் காப்பீட்டுக்கான கட்டாயப் பங்களிப்புகள் AHV – 1. Säule காலாவதியான காப்பீடு IV வேலைவாய்ப்பின்மை காப்பீடு ALV மற்றும் விபத்துக் காப்பீடு UV போன்றவற்றுக்கான பங்களிப்புகள் உங்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும். ஆண்டு வருமானம் சுமார் 20 ஆயிரம் CHFல் இருந்து தொழிலாளர் நல திட்டத்துக்கும் 2. Säule எனப்படுகிறது. AHV க்கான கூடுதல் தொகையாகவும் பங்களிப்புகள் பிடித்தம் செய்யப்படுகின்றன. மொத்தத்தில் கட்டாய சமூகப் பாதுகாப்புக் காப்பீட்டுப் பங்களிப்புகள் உங்கள் வருமானத்தில் 15 சதவீதமாக இருக்கும்.

## வேலை தேடுதல்

வட்டார வேலை வாய்ப்பு மையங்களில் RAV வேலைவாய்ப்பு பற்றிய விளம்பரங்களைப் பார்வையிடலாம். நாளிதழ்கள் வட்டார அல்லது நகராட்சி அரசிதழ்கள் தற்காலிக வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் இணையதளங்களிலும் இவற்றைப் பார்க்கலாம். உதாரணமாக பின்வரும் இணையதளங்களிலும் பார்க்கலாம்:

www.arbeit.swiss
www.suedostschweizjobs.ch
www.jobs.ch

## வேலையில்லையா - இப்போது என்ன செய்வது?

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் ஒருவர் வேலையில்லாமல் திண்டாட நேரிட்டால் அவர் வேலையற்றோருக்கான உதவித் தொகை பெறத் தகுதி உடையவராவார். எனினும் இதற்கான விதிமுறைகளை அவர் முழுமையாகப் பூர்த்தி செய்தல் அவசியம். இதற்கான அடிப்படை விதிமுறை என்னவெனில் செல்லத்தக்க வசிப்பிட அனுமதி மற்றும் வேலையிழப்புக்கு முந்தைய இரண்டாண்டு காலத்தில் 12 மாதங்கள் பணியில் இருந்திருப்பது அவசியம். வேலையின்மை பற்றிய கேள்விகளுக்கு விளக்கம் பெற வேலையில்லாதோர் காப்பீட்டு நிதியம் மற்றும் வட்டார வேலை வாய்ப்பு மையங்களை RAV தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் வேலையில்லாதவராக அல்லது வேலையை இழக்கும் அபாயம் உள்ளவராக

இருந்தால் பின்வருவன மிகவும் முக்கியமானதாகும்:

. நீங்கள் புதிய வேலையைத் தேடுவதற்கான முயற்சியில் இது வரையில் இறங்கவில்லை எனில் இப்போது உடனடியாக இறங்குங்கள். வேலையில்லாதோர் உதவித் தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது உங்களின் வேலை தேடும் முயற்சிகளுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். அது சம்பந்தமான கடிதப் போக்குவரத்து மற்றும் எழுத்துபூர்வ விண்ணப்ப நகல்கள் நிராகரிப்பு கடிதங்கள் போன்றவற்றை பத்திரமாக சேமித்து வைக்கவும்.

. நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள வேலைவாய்ப்பு மையத்துக்கு உடனடியாக தெரியப்படுத்தவும்.

www.kiga.gr.ch oder
www.arbeit.swiss

## சட்டவிரோத வேலைவாய்ப்புகள்

சுத்தம் செய்தல், குழந்தைப் பராமரிப்பு, வீட்டுவேலை மற்றும் தோட்டவேலை செய்து சம்பாதிப்பதும் வேலைவாய்ப்பாகவே கருதப்படும். இதற்கு முதலாவதாக சம்பந்தப்பட்ட காவல்துறை பிரிவால் வழங்கப்படும் அனுமதி ஒன்றை வைத்திருக்க வேண்டும். இரண்டாவதாக சமூகப் பாதுகாப்பு அதிகாரிகளால் அல்லது தனிப்பட்ட முறையில் முறையாகப் பதிவு செய்திருக்க வேண்டும். அப்படிப் பதிவு செய்யாவிட்டால் நீங்கள் செய்வது சட்டவிரோத வேலையாகக் கருதப்படும். வேலையிழப்பு, விபத்து, தகுதிநீக்கம் நேரிடும்போது சம்பந்தப்பட்ட நபர் காப்பீடு பெற முடியாது.

**Staatssekretariat für Wirtschaft SECO**
பொருளாதார விவகாரங்களுக்கான மாகாண தலைமைச் செயலகம்

✆ 058 462 56 56
www.keine-schwarzarbeit.ch

## அடிப்படை மற்றும் மேற்பயிற்சி

அடிப்படை பயிற்சி மற்றும் மேற்பயிற்சி பற்றிய பல்வேறு தகவல்கள் வாழ்க்கைத் தொழில் தகவல் மையங்களில் BIZ கிடைக்கின்றன. இந்த தகவல்களை தருவதற்கும் சுருக்கமான ஆலோசனைகளை வழங்கவும் தகுதிவாய்ந்த ஊழியர்கள் இங்கு உள்ளனர். வேலை நாட்களில் எந்த கட்டணமும் முன்அனுமதியும் இன்றி நீங்கள் இந்த மையங்களுக்கு செல்லலாம். உங்களுக்கான பிரத்யேகப் பணி வாய்ப்புகள் பற்றிய ஆலோசனைக்கு கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதுடன் முன் அனுமதி பெறுவதும் அவசியமாகும்.

பணி சார்ந்த தகவல்கள் படிப்புகள் மற்றும் வாழ்க்கைத்தொழில் கலந்தாய்வு மற்றும் வட்டாரக் கலந்தாய்வு மற்றும் தகவல் மையங்கள் BIZ பற்றி மேலும் அதிகமான தகவல்களை இங்கு பெறலாம்

**Amt für Berufsbildung Graubünden**
கிறவ்புன்டன் Graubünden தொழில்முறைக் கல்வி அலுவலகம்

✆ 081 257 27 68
www.berufsbildung.gr.ch

## வெளிநாட்டு பட்டயங்களுக்கு அங்கீகாரம்

வெளிநாட்டு டிப்ளோமாக்களை அங்கீகரிப்பதற்கான கேள்விகள் இருப்பின் கல்வி, ஆய்வு மற்றும் புதுப்பித்தலுக்கான அரச செயலரின் தேசிய தொடர்பு நிலையத்தை நீங்கள் நாடுங்கள்.

**Staatssekretariat für Bildung, Forschung und Innovation SBFI**
உயர்கல்வி, ஆய்வுசெய்தல் மற்றும் புதுப்பித்தலுக்கான அமைச்சின் செயலர்

✆ 058 462 28 26
www.sbfi.admin.ch

நீங்கள் பல ஆண்டுகால பணி அனுபவம் உள்ளவராக இருந்தால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுபவத்தை மதிப்பீடு செய்து தொழில்முறை தகுதி ஒன்றுக்கு நீங்கள் சுவிட்சர்லாந்தில் முறையான அங்கீகாரத்தைப் பெறலாம்.

**Amt für Berufsbildung Graubünden**
கிறவ்புன்டன் Graubünden தொழில்முறைக் கல்வி அலுவலகம்

✆ 081 257 27 68
www.berufsbildung.gr.ch

பட்டப் படிப்புகளுக்கு அங்கீகாரம் பெற

**Rektorenkonferenz der Schweizerischen Hochschulen swissuniversities**
சுவிஸ் பல்கலைக்கழகங்களின் முதல்வர்கள் மாநாடு

✆ 031 335 07 40
www.swissuniversities.ch



8

# வசிப்பிட அனுமதி கணவன், மனைவி மற்றும் குழந்தைகளுக்கான வசிப்பிட அனுமதிகள்

EU/EFTA சார்ந்த குடிமக்களுக்கான வசிப்பிட அனுமதிகளுக்கு நீங்கள் சுவிட்சர்லாந்து வருவதற்கு முன்பாகவும் அல்லது வந்த பிறகும் கூட விண்ணப்பிக்கலாம். EU/EFTA- ல் உறுப்பினராக இல்லாத மற்ற நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் பணியில் இருந்தால் அவர்களுக்கான வசிப்பிட அனுமதி விதிவிலக்கான ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்படும். அதாவது அவர்கள் தகுதி வாய்ந்த பணியாளர்களாக இருக்க வேண்டும் அல்லது சிறப்பு அடிப்படையில் விதிவிலக்கு அளிக்கப்படுவதை அவர்கள் நியாயப்படுத்துவது அவசியமாகும்.

EU/EFTA நாடுகளின் உறுப்பினர்கள், அவர்கள் எந்த வகையான குடியிருப்பு அனுமதியை வைத்திருந்தாலும், தங்களுடைய குடும்பத்தினர்களுடன் ஒன்றிணைய முடியும். குடும்ப உறுப்பினர்களாக இருப்பதற்கு பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் தகுதி பெற்றவர்களாவர். குடியிருப்பு அனுமதி ஒன்றைக் வைத்திருக்கும் மூன்றாம் நாடுகளின் குடியிருப்பாளர்கள் தங்களுடைய குடும்பத்துடன் (வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகள்) ஒன்றிணைவதற்காக, சட்டப்படியானத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, குடிபெயர்தல் மற்றும் குடியியல் சட்டத்திற்கான அலுவலகத்திடம் (Amt für Migration und Zivilrecht) வேண்டுக்கோள் ஒன்றை சமர்ப்பிக்கலாம். குடும்ப மறுஐக்கியத்திற்கான வேண்டுகோள் 5 ஆண்டுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும், 12 வயதிற்கும் அதிகமான பிள்ளைகள் இருந்தால், ஒரு வருடத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஜெர்மன் மற்றும் இத்தாலிய மொழியில் இருக்கும் மிகவும் முக்கியமான தகவல்களுடன், குடியிருப்பு அனுமதிகள் மற்றும் குடும்ப மறுஐக்கியம் குறித்த தகவல் தாள்கள் குடிபெயர்தல் மற்றும் குடியியல் சட்டத்திற்கான / க்ரிசன்ஸ் அலுகவலகத்தில் (Amt für Migration und Zivilrecht Graubünden) அல்லது அதன் இணையத்தளத்தில் கிடைக்கும்.

**Amt für Migration und Zivilrecht Graubünden AFM**
குடிபெயர்தல் மற்றும் குடியியல் சட்டத்திற்கான (AFM) /கிரிசன்ஸ் அலுவலகம்

✆ 081 257 30 01
www.afm.gr.ch

# திருமணம் மற்றும் குடும்பம்

## திருமணம்

சுவிட்சர்லாந்தில் திருமணம் செய்து கொள்வதற்கு நீங்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். பதிவு அலுவலகங்களில் நடக்கும் திருமணங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்படும். உங்கள் வசிப்பிடம் உள்ள பகுதிக்கான சம்பந்தப்பட்ட பதிவு அலுவலகம் திருமணத்துக்கு என்னென்ன தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் மற்றும் தேவையான ஆவணங்கள் எவை என்பது பற்றி உங்களுக்கு தெரிவிக்கும்.

## இரு மொழிச் சோடிகள் மற்றும் குடும்பங்கள்

சுவிசில் ஒவ்வொரு மூன்றாவது திருமணமும் இருமொழித் திருமணமாகவே உள்ளது. இரு மொழிச் சோடிகள் மற்றும் குடும்பங்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்த கேள்விகள் மற்றும் விடைகளை www.binational.ch எனும் இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

www.binational.ch

## வாழ்வியல் உறவுமுறைகள்

ஒரே பாலினத்தை சேர்ந்த தம்பதியினர் தங்களுடைய உறவைப் பதிவு செய்துகொள்வதற்கு இங்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட பதிவு அலுவலகம் இதற்கு தேவையான நடைமுறைகள் பற்றி உங்களுக்கு தெரிவிக்கும்.

## கட்டாயத் திருமணம்

சுவிட்சர்லாந்தில் உங்கள் துணையை விருப்பப்படி தேர்ந்தெடுப்பதற்கான உரிமை உங்களுக்கு வழங்கப்படுகிறது. அதேபோல எந்த ஒரு ஆண் அல்லது பெண்ணையும் அவர்கள் விருப்பத்துக்கு மாறாக திருமணத்துக்கு வற்புறுத்தும் உரிமை குடும்பத்தினருக்கோ அல்லது வேறு எவருக்குமோ கிடையாது.

**Fachstelle Zwangsheirat**
துறைசார்நிலையம் கட்டாய திருமணம்

✆ 0800 800 007
(இலவச உதவித் தொடர்பு)
www.zwangsheirat.ch

## பிறப்பு

ஒவ்வொரு குழந்தை பிறப்பு பற்றியும் நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட பதிவு அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். குழந்தை மருத்துவமனையில் பிறந்தால் குழந்தை பிறப்பை மருத்துவமனையே பதிவு செய்துவிடும். வீட்டில் குழந்தை பிறந்தால் அதைப் பதிவு செய்வது பிரசவம் பார்த்த செவிலியரின் பொறுப்பாகும்.

## பேறுகால விடுமுறை மற்றும் பேறுகால ஊதியங்கள்

பணிபுரியும் பெண்கள் குழந்தை பெற்றுக் கொண்டால் அவர்கள் பேறுகால ஊதியம் பெற உரிமை உண்டு. இதற்கு குழந்தை பிறக்கும் வரையிலான 9 மாதத்துக்கு காப்பீடு செய்யப்பட்டிருப்பதுடன் இதே காலகட்டத்தில் குறைந்தது 5 மாதங்களாவது பணியில் இருந்திருக்க வேண்டியது கட்டாயமாகும். பேறுகால ஊதியம் பெறுவது குழந்தை பிறந்த நாளில் இருந்து தொடங்கி 14 வாரம் பூர்த்தியடைந்தவுடன் நிறைவடையும். இந்த காலகட்டத்தில் ஊதியத்தில் 80சதவீதம் வரை வழங்கப்படும். எனினும் இது நாளொன்றுக்கு அதிகபட்சம் 196.00 CHF ஆக இருக்கும்.

**Sozialversicherungsanstalt des Kantons Graubünden SVA**
கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் சமூகக் காப்பீட்டு நிறுவனம்

✆ 081 257 41 11
www.sva.gr.ch

9

## குடும்ப உதவித்தொகைகள்

பணியில் இருப்பவர் குடும்ப உதவித் தொகை பெற உரிமை உள்ளவராவார். 16 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் குழந்தை உதவித் தொகையாக CHF 220.00 வழங்கப்படுகிறது. கல்வி பயிலும் அல்லது பயிற்சி பெறும் இளம் நபர்களுக்கு அதிகபட்சமாக 25 வயது வரை மாதாந்திர கல்வி/பயிற்சி உதவித் தொகையாக CHF 270.00 வழங்கப்படுகிறது. குடும்ப உதவித் தொகையை மாத ஊதியத்துடன் சேர்த்து சம்பந்தப்பட்ட நிர்வாகம் வழங்கும். சில சூழ்நிலைகளின் கீழ் பணியில் இல்லாத பெற்றோரும் குழந்தை உதவித் தொகையைப் பெறலாம்.

**Sozialversicherungsanstalt des Kantons Graubünden SVA**
கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் சமூகக் காப்பீட்டு நிறுவனம்

✆ 081 257 41 11
www.sva.gr.ch



# குழந்தைகள

## பலமொழிகளிகளுடன் வளர்தல்

ஒரு பிள்ளையால் பிறப்புத் தொடக்கம் இரு அல்லது பல மொழிகளை நன்கு கற்றுக்கொள்ள முடியும். பெற்றோருக்கு ஆலோசனை வழங்கும் ”என்னுடன் கதையுங்கள் அத்துடன் நான் சொல்வதைக் கேளுங்கள்!” எனும் பிரசுரத்தில், நீங்கள் எவ்வாறு உங்கள் பிள்ளை பல மொழிகளில் விருத்தியடைவதை ஊக்குவிக்கலாம் என்ற எடுத்துக்காட்டல்களைக் காணலாம். இந்தப் பிரசுரம் 14 மொழிகளில் உள்ளது. இதை இலவசமாக இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

**Fachstelle Integration Graubünden**
கிறவ்புன்டன் Graubünden
ஒருங்கிணைப்புத் துறை

✆ 081 257 26 38
www.integration.gr.ch

## பெற்றோர் ஆலோசனை நிலையம்

குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகளின் பெற்றோர்கள், பெற்றோர் ஆலோசனை நிலையத்தைத் தொடர்புகொள்ளலாம். இவர்களிற்கு அங்கு உணவூட்டல், கவனிப்பு, பராமரிப்பு மற்றும் வளர்ப்புக் குறித்த கேள்விகள் இருப்பின் உதவி வழங்கப்படும். அத்துடன் பிள்ளை அடிக்கடி சத்தமாக அழுதால் அல்லது அமைதியற்று இருந்தால், நீங்கள் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக நீங்கள் ஒரு ஆலோசனை நிலையத்தை நாடலாம். பெற்றோர் ஆலோசனை அலுவலகர்கள் நீங்கள் விரும்பினால் உங்கள் வீட்டிலோ அல்லது தொலைபேசியிலோ அல்லது இணைய வழியாகவோ ஆலோசனைகளை வழங்குவார்கள்.

உங்கள் பிரதேசத்தின் ஆலோசனை வசதிகள் குறித்த தகவல்களை நீங்கள் உங்கள் நகரசபையில் பெற்றுக்கொள்ளலாம்.

## குடும்ப- மற்றும் பெற்றோர்- Apps

பல பிரயோசனமான Apps உள்ளன, அவை நாளாந்த குடும்ப வாழ்வில் பெற்றோருக்கு பல வித்தியாசமான விடயங்களில் உதவிசெய்யும். அவற்றில் சில பல மொழிகளில் உள்ளதுடன் இலவசமானவை.

Parentu – 0 மற்றும் 16 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் பெற்றோருக்கான எடுத்துக்காட்டுகள்
**Kleine Weltentdecker –** (உலகைக் கண்டுபிடிக்கும் சிறியவர்) – சிறுபிள்ளைகளின் பெற்றோருக்கான எடுத்துக்காட்டுகள்
**Erste Hilfe (SRK)** முதலுதவி – அவசர நிலைமைகளுக்கானது

## புத்தகங்கள் மற்றும் விளையாட்டுக்களை இரவலாகப் பெற்றுக்கொள்வது

மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் புத்தகங்கள் மற்றும் பொம்மைகளுக்கான நூலகங்கள் உள்ளன. இந்த நூலகங்களில் உரிய கட்டணம் செலுத்தி புத்தகங்கள் மற்றும் பொம்மைகளை வாடகைக்குப் பெறலாம். இவை தொடர்பான தகவல்களை உங்கள் கிராமசபைகளில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

Chur நகர நூல்நிலையம் பிற மொழி ஊடகங்களுக்கு பெரிய அளவில் வசதிசெய்து கொடுத்துள்ளது. அது மாலை வேளைகள் மற்றும் வார இறுதியிலும் திறந்திருக்கும்.

## பராமரிப்பு வசதிகள் (விளையாட்டுக்குழு)

விளையாட்டுக்குழுவில், 3 வயது முதலான குழந்தைகள் மழலையர் பள்ளிக்கு செல்லும் வரை வாரம் ஒரு முறை அல்லது இரண்டு முறை சேர்ந்து பழகலாம். குழந்தைகள் வீட்டுக்கு வெளியே வந்து மற்றவர்களுடன்

முதல் முறையாகப் பழகும் அனுபவத்தைப் பெற பாதுகாப்பான, எளிமையான சூழ்நிலையை விளையாட்டுக்குழு வழங்குகிறது. இது பற்றிய தகவல்களை நீங்கள் வசிக்கும் இடத்தில் இருந்து பெறலாம்.

## பிள்ளைகள் நிலையம் மற்றும் நாளாந்த பெற்றோர் பராமரிப்பு

குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் வயதை அடையும் வரை அவர்களை மழலையர் விடுதி கவனித்துக் கொள்ளும். நீங்கள் வசிக்கும் பகுதியில் அல்லது பின்வரும் முகவரியில் குழந்தைநலச் சேவைகள் பற்றிய தகவல்களைப் பெறலாம்

**famur - für Familien in Graubünden**
**Graubünden** இல் உள்ள குடும்பங்களுக்கானது

✆ 081 300 11 40
www.famur.ch

குழந்தைகளை குழந்தைக் காப்பாளர்களின் பொறுப்பிலும் விட்டுச் செல்லலாம். பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் உட்பட எல்லா வயது குழந்தைகளையும் இவர்கள் வீட்டுக்கே வந்து கவனித்துக் கொள்வார்கள். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டிய நேரத்தை மதிய உணவுவேளை, வீட்டுவேலையில் உதவி, நாள் முழுவதும் அல்லது வார இறுதிநாட்களில் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

## பாடசாலை மேலதிக செயல்பாடுகள்

பாடசாலை நேரத்துக்கு பின்பு விளையாட்டு, உணவு, அல்லது விடுமுறை நாட்கள் போன்ற சேவைகள் குறித்து உங்களுக்கு கேள்விகள் ஏதும் இருந்தால் உங்கள் பாடசாலை நிர்வாகம் அல்லது சம்பந்தப்பட்ட மாகாணத் துறையை தொடர்பு கொள்ளவும்.

**Amt für Volksschule und Sport Graubünden AVS**
கிறவ்புன்டன் Graubünden தொடக்கப் பள்ளி மற்றும் விளையாட்டுத் துறை

✆ 081 257 27 36
www.avs.gr.ch

## பெற்றோர்க்கான அவசர அழைப்பு

பிள்ளைகள் வளர்ப்பு என்பது அதிகவேளைகளில் பெற்றோருக்கு ஒரு பெரிய சவாலாகும். பெற்றோர் அவசர அழைப்பு குடும்பத்தில் வளர்ப்புக் குறித்த கேள்விகள், முரண்பாடுகள் அல்லது பிரச்சினைகளின்போது எந்த நேரத்திலும் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் ஊடாக இலவசமாக ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குகின்றது.

**Elternnotruf Graubünden**
பெற்றோர்க்கான அவசர அழைப்பு

✆ 0848 35 45 55
(வீட்டுத் தொலைபேசிக் கட்டணம்)
www.elternnotruf.ch

# பள்ளி மற்றும் பணி சார்ந்த பயிற்சி

சுவிட்சர்லாந்தில், பள்ளி அமைப்பு முறை மாகாணத்துக்கு மாகாணம் வேறுபடும். கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில், பள்ளிக் கல்வி கட்டாயமானது என்பதுடன் 7 வயதில் இருந்து 16 வயது வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது.

## மழலையர் பள்ளி

குழந்தைகள் 5வது வயதில் இருந்து மழலையர் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இது இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும்.

## கட்டாயக் கல்வி

கட்டாயக் கல்வி, குழந்தையின் 7வது வயதில் தொடங்கி தொடர்ந்து 9 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில் உள்ள பள்ளி அமைப்பு

| | | |
|---|---|---|
| மழலையர் பள்ளி | | 2 ஆண்டுகள் |
| ஆரம்ப நிலை | ஆரம்பப் பள்ளி | 6 ஆண்டுகள் |
| உயர் நிலை I | உயர்நிலைப் பள்ளி, இடைநிலைப் பள்ளி | 3 ஆண்டுகள் |
| உயர் நிலை II | சுயவிருப்ப 10ம் வகுப்பு, சிறப்பு இடைநிலைப் பள்ளி, தொழில்முறை பயிற்சி, பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி, உயர்தராதரகல்விப் பள்ளி | 2–5 ஆண்டுகள் |
| மூன்றாம் நிலை | தொழில்நுட்பக் கல்லூரி, அரசு உயர் தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகம் | 3–6 ஆண்டுகள் |

அனைத்து பள்ளித் தலைப்புகள் குறித்த விவரங்களும் பள்ளிகளில் இருந்தே பெற்றுக் கொள்ளலாம் அல்லது தொடர்புக்கு:

**Amt für Volksschule und Sport Graubünden AVS**
கிறவ்புன்டன் Graubünden தொடக்கப் பள்ளி மற்றும் விளையாட்டுத் துறை

✆ 081 257 27 36
www.avs.gr.ch


BWS
SCHRITT
TEMPO
SCHRITT

## பெற்றோருக்கான பொறுப்புகள்

குழந்தைகளை வளர்ப்பது மற்றும் அவர்களுக்கு கல்வியறிவு கொடுப்பது பெற்றோரின் பொறுப்பாகும். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவது, அவர்கள் பள்ளிக்கு தவறாமல் வருவதை உறுதி செய்வது, அட்டவணை மற்றும் பள்ளியின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடப்பது ஆகியவற்றை பெற்றோர் உறுதி செய்ய வேண்டும். குழந்தைகள் வீட்டுப்பாடங்களை தவறாமல் செய்து முடிப்பது, அவ்வாறு செய்து முடிக்கத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதையும் பெற்றோர் உறுதி செய்தல் அவசியம். சுவிட்சர்லாந்தில் பெற்றோர் மற்றும் பள்ளிக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மிகவும் முக்கியமானது. பெற்றோர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் மாலை நேரக் கூட்டத்துக்கு வருமாறு பெற்றோர்களுக்கு பள்ளி நிர்வாகம் அழைப்பு விடுக்கும். பெற்றோர் மற்றும் குழந்தைகள் இவற்றில் பங்கேற்பது பள்ளியில் எழும் பிரச்சினைகளக்கு நல்ல தீர்வைக் காண மிகவும் அவசியமாகும் அத்துடன் குழந்தைக்கான எதிர்காலத் தொழில் தேர்வு குறித்து முடிவு செய்யவும் இது உதவும்.

## இளைஞர்களுக்கான கட்டணமில்லா வாழ்க்கைத்தொழில் சேவை

இளைஞர்கள் தங்களுடைய தொழில், கல்விப் பாடம் அல்லது வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுத்துகொள்ள தொழிற்கல்வி, கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் ஆலோசகர்கள் உதவிடுவார்கள். விவாதங்கள், தகவல்கள் மற்றும் தேர்வுகளின் வாயிலாக இளைஞர்கள் ஒரு முடிவெடுப்பதற்கு இவர்கள் உதவுகிறார்கள். மாகாண ஆலோசனை மையங்கள் சுர், டவோஸ், இலான்ஸ், போஸ்ச்சியாவோ, ரோவெரிடோ, சமிடன், ஸ்கோல் மற்றும் தூசிஸில் அமைந்துள்ளன.

**Amt für Berufsbildung Graubünden**
கிறவ்புன்டன் Graubünden தொழில்முறைக் கல்வி அலுவலகம்

✆ 081 257 27 68
www.berufsbildung.gr.ch

## மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தொழில்முறைப்பயிற்சி

கட்டாயக் கல்வி காலம் முடிந்த பிறகு, பொது மேல்நிலைப் பள்ளி அல்லது தொழில்முறைப் பயிற்சி பெறுவது குறித்து மாணவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

## இணைப்புப்பால வசதிகள்

இளையோர்கள், கட்டாய பாடசாலைக் காலத்தின் பின்னர் தொழிற்கல்விக்கான இடத்தைப் பெறாவிட்டால், ஒரு இணைப்புப்பால வசதிக்குச் செல்லலாம். இது பாடசாலை இடைவெளியை நிரப்புவதுடன் ஒரு தொழில் ஆர்வத்தைத் தூண்டச் செய்யும். இந்த வசதிகள் குறித்து நேரகாலத்துடன் ஆசிரியருடன் அல்லது தொழில் ஆலோசனை நிலையத்தில் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

## தாமதமாகக் குடியேறிய இளையோர்கள்

கல்வி பெரிதளவில் பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் பங்கேற்கும் சந்தர்ப்பங்களை முடிவுசெய்கின்றது. ஆகவே பிறமொழி பேசும் இளையோர்கள், தமது கட்டாய பாடசாலைக் காலத்தை ஏற்கனவே தமது நாடுகளில் முடித்திருந்து, தமது குடும்பத்துடன் ஒன்றுசேர்வதற்காக சுவிசுக்கு வந்திருந்தால், தொழிற்கல்வித் திட்டத்தில் இணைந்து ஒரு இடத்தைப் பெற்றுக்கொள்ளவது முக்கியமானதாகும்.

விசேடமாக பிறமொழி பேசும் இளையோர்களுக்களின் தேவைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட கல்வி வசதிகள் இணைப்புப்பால வசதிகள் அல்லது ஒரு தொழிற்கல்வியைக் கற்கும் வழிகளில்

உதவுகின்றன. இப்படியான கல்வி வசதிகள் குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை நீங்கள் இங்கு காணலாம்.

**Informationszentrum Integration Graubünden**
ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம் Graubünden

✆ 081 257 36 83
www.integration.gr.ch

### இலக்கணப் பள்ளிகள், வணிக மற்றும் சிறப்பு இடைநிலைப் பள்ளிகள் பொதுப் பள்ளிகள்

பல்வேறு சேவைகள் பற்றிய தகவல்களை இங்கு காணலாம்

www.bks-campus.ch
www.ahb.gr.ch

### தொழில்முறைப் பணிப் பழகு பயிற்சி

பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு இளம் ஆண், பெண்கள் தொழில்முறைப்பயிற்சி பெற விரும்பினால், உதாரணமாக தச்சுத் தொழில், மின் தொழிலாளர் அல்லது தையற்காரர், அவர்கள் தொழில்முறைப்பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஒரு பயிற்சி ஒப்பந்தத்தின் அடிப்படையில், பயிற்சி தரும் நிறுவனத்தில் பயிற்சியாளர்கள் பணியமர்த்தப்படுவார்கள். அங்கு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதுடன், ஊதியமும் வழங்கப்படும். அவர்கள் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் பயிற்சிக் கல்லூரி வகுப்புக்குச் செல்வர். மற்ற நாட்களில் நிறுவனத்தில் செய்முறைப் பயிற்சி பெறுவார்கள். பயிற்சி இரண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்கும். முடிவில் அரசாங்கப் பயிற்சி சான்றிதழ் அல்லது அரசாங்கத் திறன் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். இந்த இரண்டு தகுதிகளுமே சுவிட்சர்லாந்து முழுவதும் அங்கீகரிக்கப்பட்டவை ஆகும்.

### தொழில் உயர்கல்வி

தொழில் உயர்கல்வி என்பது தொழில் அடிப்படைக்கல்வியுடன் ஒரு மேலதிகமான பொதுக்கல்விக்கு மாற்றீடாக அமைகின்றது. இது உயர்கல்லூரிக்கு குர் செல்வதற்கான வசதியைக் கொடுக்கின்றது. வேறொரு மாற்றீட்டுப் பரீட்சை ஊடாக பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டப்படிப்பை மேற்கொள்ளவும் வசதிசெய்கின்றது.

### மூன்றாம் நிலை பிரிவில் அடிப்படை மற்றும் மேற்பயிற்சி

கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில் பலதரப்பட்ட உயர் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு நிலையங்கள் உள்ளன.

**Amt für Höhere Bildung Graubünden**
உயர் கல்வித் துறை

✆ 081 257 61 65
www.ahb.gr.ch

11

### பள்ளி உளவியல் சேவை

மழலையர் பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் வளர்ச்சி, நடத்தை மற்றும் மனநலத்தில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால், அவர்களுக்கு உதவும் நோக்கில் பல்வேறு கலந்தாய்வுச் சேவைகள் அளிக்கப்படுகின்றன. பெற்றோர், குழந்தைகள், இளைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வித்துறை வல்லுநர்களுக்கு சுய உதவிக்கான உதவி என்ற வடிவத்தில் இச்சேவைகள் வழங்கப்படுகின்றன.

**Amt für Volksschule und Sport Graubünden AVS**
கிறவ்புன்டன் Graubünden தொடக்கப் பள்ளி மற்றும் விளையாட்டுத் துறை

✆ 081 257 27 41
www.avs.gr.ch

### கிறவ்புன்டன் Graubünden மாகாணக் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான உளவியல் சிகிச்சை

உங்களுடைய குழந்தை தனக்குள்ளாகவே சிரமங்களைக் கொண்டிருத்தல், குடும்பத்தினருடன், நண்பர்களுடன் பழகுவதில் கடினங்களைக் கொண்டிருத்தல் அல்லது சட்டதிட்டங்களுக்கு எதிராக நடந்து கொள்ளுதல் போன்ற உளவியல் ரீதியான ஏதேனும் பிரச்சினையைக் கொண்டிருந்தால், பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்

**Kinder- und Jugendpsychiatrie Graubünden kjp**
கிறவ்புன்டன் Graubünden குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான மனநோய்ச் சிகிச்சை

✆ 058 225 19 19
www.kjp-gr.ch

### குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள்

பிள்ளை ஒன்று தான் அனுபவித்த வன்முறையின் அறிகுறிகளை காண்பிக்கும் பட்சத்தில கிறபுண்டனில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆலோசனை நிலையத்துடன் நிபுணத்துவ ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புக்கு தொடர்பு கொள்ள முடியும்.

**Beratungsstelle Opferhilfe Graubünden**
கிறவ்புன்டன் Graubünden பாதிக்கப்பட்டோர் ஆலோசனைக்கான மையம்

✆ 081 257 31 50
www.soa.gr.ch

# வீட்டுவசதி

## அடுக்குமாடி குடியிருப்பு விளம்பரங்கள்

அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் பற்றிய விளம்பரங்களை உங்கள் வாரஇதழ், தினசரி செய்தித்தாள்கள் மற்றும் இணையத்தில் காணலாம். Migros மற்றும் Coop போன்ற மிகப் பெரிய பல்பொருள் அங்காடிகளின் வாடிக்கையாளர் அறிவிப்பு பலகைகளில், குறைந்த விலை வீடுகள் பற்றிய குறிப்புகள் சிலசமயம் இடம்பெற்றிருக்கும்.

www.immoscout.ch
www.homegate.ch
www.comparis.ch
www.newhome.ch
www.suedostschweiz.ch

அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பதற்கு உங்களுக்கு ஆர்வம் இருந்தால், நீங்கள் பொதுவாக ஒரு பதிவுப் படிவத்தை பூர்த்தி செய்து அதனுடன் வசூல் பதிவேடு தகவல்கள் மற்றும் உங்கள் வசிப்பிட அனுமதி போன்ற ஆவணங்களின் நகல்களை சேர்த்து அடுக்குமாடி குடியிருப்பின் உரிமையாளர் அல்லது மேலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

முக்கியமானவை:

- அடுக்குமாடி குடியிருப்பு விளம்பரத்தின் அடிப்படையில் நீங்கள் விண்ணப்பிக்கிறீர்கள் வாடகைதாரரை உரிமையாளர் தேர்வு செய்கிறார்.
- எத்தனை மாதத்துக்கு முன் வீட்டைவிட்டுசெல்லலாம் என்ற வாடகை ஒப்பந்த விதிமுறைகளை கவனமாகப் பார்க்கவும்.
- வாடகைக்கு விடப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில், அங்கு பிற வீடுகளில் வசிக்கும் உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகளை காக்கும் வகையில் கட்டிட விதிமுறைகள் இருக்கும் உதாரணமாக இரவு நேரங்களில் அமைதி காத்தல், சலவை இயந்திர பயன்பாடு போன்றவை.
- ஒவ்வொரு குடியிருப்பிலும் குடியிருப்புகள் உள்ளேயும் வெளியேயும் சுத்தமாக பராமரிக்கப்படுவதையும், கட்டிட விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுவதையும் உறுதி செய்ய பராமரிப்பாளர் ஒருவர் இருப்பார்.
- ஒவ்வொரு வீடும் வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கு ஒரு கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அதற்குச் செலுத்த வேண்டிய தொகை குறித்து சுவிஸ் வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கான கட்டண நிலையம் தாமாகவே அறியத்தருவார்கள் (Serafe).

**Serafe AG**

✆ 058 201 31 67
www.serafe.ch

மேலும் அதிக தகவல்கள் மற்றும் 17 மொழிகளில் கிடைக்கப்பெறுகின்ற “வீட்டுவசதி“ குறித்த ஒரு கையேட்டை கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்

**Bundesamt für Wohnungswesen BWO**
வீட்டுவசதிக்கான மத்திய அலுவலகம்

✆ 058 480 91 11
www.bwo.admin.ch



## வாடகைதாரர் சட்டத்துக்கான ஆலோசனை மையம்

கிறவ்புன்டன் Graubünden மாகாண வாடகைதாரர் கூட்டமைப்பு, ஒரு அடுக்குமாடி குடியிருப்பை வாடகைக்கு விடுவது சம்பந்தமான தகவல்களை உங்களுக்கு அளிக்கிறது.

**Mieterverband Graubünden**
கிறவ்புன்டன் Graubünden
குடியிருப்பாளர்கள் அறக்கட்டளை

✆ 081 253 60 62
www.mieterverband.ch

பிரச்சினைகள் ஏதும் எழுந்தால் சம்பந்தப்பட்ட சமரச தீர்வு மையத்தின் முகவரியை நீங்கள் நகராட்சி அலுவலகத்தில் பெறலாம்.

# சுகாதாரம்

"சுகாதாரம்" குறித்த விபரமான தகவல்களை இணையத்தளமான www.bischfit.ch மற்றும் www.migesplus.ch தருகின்றது. விசேடமாக விதந்துரை செய்யப்படுவது "சுகாதார வழிகாட்டி", இது பல வித்தியாசமான மொழிகளில் உள்ளது.

www.bischfit.ch
www.migesplus.ch

## மருத்துவர்களின் முகவரிகள்

எந்த ஒரு தொலைபேசி தகவல் தொகுப்பிலும் உங்கள் பகுதியில் உள்ள மருத்துவர்களின் பட்டியல் இடம் பெற்றிருக்கும்.

## உடல்நலக் குறைவு அல்லது விபத்து

சுவிட்சர்லாந்தில், உங்களுக்கென பிரத்யேகமான வீட்டு மருத்துவரை கொண்டிருப்பது பொதுவாக நடைமுறையில் உள்ளது. சுகவீனம் அல்லது விபத்து நேரும்போது இந்த மருத்துவரைத்தான் நீங்கள் முதலில் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும். உங்கள் வீட்டு மருத்துவரை தொலைபேசி மூலமாக தொடர்புகொள்ள முடியாதபட்சத்தில் அவரது தொலைபேசியின் பதிலளிக்கும் எந்திரத்தில், மாற்று மருத்துவர் பற்றிய தகவலை அளிக்கும். அருகே உள்ள மருத்துவமனையையும் நீங்கள் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.

அவசரகால உதவிக்கு, பின்வரும் எண்ணை அழைக்கவும்

அவசரகால மருத்துவ உதவி எண்

✆ 144

## அவசரநிலை என்ன செய்வது?

பார்க்க அத்தியாயம் 21, பக்கம் 64

## மருத்துவமனை

உடல்நலப் பிரச்சினைகள் இருப்பின், அதற்கேற்ற பரிசோதனைகள், சிகிச்சைகள் அல்லது ஒரு சத்திரசிகிச்சை தேவைப்படின், உங்கள் குடும்ப வைத்தியர் ஒரு நிபுணத்துவ வைத்தியரிடம் அல்லது ஒரு வைத்தியசாலைக்கு அனுப்பிவைப்பார். உங்கள் மருத்துவக்காப்புறுதி நிறுவனத்திடம் நீங்கள் எந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறலாம் என்பதைக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

## ஆலோசனை மற்றும் பராமரிப்பு வீட்டில் ஆதரவு

உடல்நலக் குறைவு அல்லது விபத்து காரணமாக பிறர் உதவி தேவைப்படுபவராக நீங்கள் இருந்தால், நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள ஸ்பிடெக்சை Spitex தொடர்பு கொள்ளலாம்.

**Spitex Graubünden**

✆ 081 252 77 22
www.spitexgr.ch

## வயோதிபர்கள்

புரோ செனடூட்டில் Pro Senectute, வயோதிபர்கள் ஆலோசனை மற்றும் ஆதரவைப் பெறுவதுடன், தேவைப்பட்டால் வீட்டிலேயே பராமரிப்பையும் பெற முடியும்.

**Pro Senectute Graubünden**

✆ 081 252 75 83
www.gr.prosenectute.ch

## உடல் ஊனம் உள்ளவர்கள்

உளவியல் ரீதியாக அல்லது உடல் ரீதியாக குறைபாடுள்ள நபர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் அல்லது அவர்களின் தொடர்பு நபர்கள் - கிறவ்புன்டன் Graubünden மாகாண சமூகக் காப்பீட்டு நிறுவனம், புரோ இன்பிர்மிஸ் Pro Senectute அல்லது - குழந்தைகளாக இருந்தால் - முன்தீர்வு கல்விச் சேவையிடம் இருந்து ஆதரவு மற்றும் ஆலோசனையைப் பெற முடியும்.

**Sozialversicherungsanstalt des Kantons Graubünden**
கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் சமூகக் காப்பீட்டு நிறுவனம்

✆ 081 257 41 11
www.sva.gr.ch

**Pro Infirmis Graubünden**

✆ 058 775 17 17
www.proinfirmis.ch

**Stiftung Heilpädagogischer Dienst Graubünden HPD**
கிறவ்புன்டன் Graubünden குறைதீர் கல்விச் சேவைகளுக்கான அறக்கட்டளை

✆ 081 257 02 80
www.hpd-gr.ch

## உளவியல் பிரச்சினைகளைக் கொண்டிருப்பவர்கள்

உளவியல்ரீதியாக பிரச்சினை உள்ள மனநோயாளிகளுக்கும், பகுதியளவு மனநோயாளிகளுக்கும் மற்றும் வீட்டில் இருக்கும் மனநோயாளிகளுக்கும் உளவியல் ரீதியான சிகிச்சை அளிக்கப்படுவதை கிறவ்புன்டன் Graubünden உளவியல் சேவைகள் PDGR உறுதி செய்கிறது.

**Psychiatrische Dienste Graubünden PDGR**
கிறவ்புன்டன் Graubünden மனநோய்ச் சிகிச்சை சேவைகள்

✆ 058 225 25 25
www.pdgr.ch

குழந்தைகள் மற்றும் இளம் நபர்களுக்கான உளவியல் பராமரிப்புக்கு Kinder- und Jugendpsychiatrie Graubünden kjp பொறுப்பேற்கிறது.

**Kinder- und Jugendpsychiatrie Graubünden kjp**
கிறவ்புன்டன் Graubünden குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான மனநோய்ச் சிகிச்சை

✆ 058 225 19 19
www.kjp-gr.ch

# காப்பீடுகள்

சுவிட்சர்லாந்தில் பல்வேறு காப்பீடுகளைப் பெற முடியும். கட்டாயக் காப்பீடுகளுடன் விருப்பக் காப்பீடுகளும் உள்ளன.

## கட்டாயக் காப்பீடுகள்

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் மக்கள் சமூகப் பாதுகாப்புக் காப்பீட்டுடன் பார்க்க- "பணி" அத்தியாயம், கூடுதலாக பின்வரும் காப்பீடுகளையும் எடுக்க வேண்டியிருக்கும்:

- அடிப்படை மருத்துவக் காப்பீடு
- விபத்துக் காப்பீடு
- நீங்கள் வாகனம் வைத்திருந்தால்: வாகனக் காப்பீடு, மோட்டார்சைக்கிள் காப்பீடு
- நீங்கள் கட்டிட உரிமையாளராக இருந்தால்: கட்டிடக் காப்பீடு

## அடிப்படை மருத்துவக் காப்பீட்டு

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் ஒவ்வொரு நபரும், சுவிட்சர்லாந்துக்கு வந்த 3 மாதத்துக்குள் தங்களுக்கு ஒரு மருத்துவக் காப்பீடு எடுக்க வேண்டியது அவசியமாகும். சுவிட்சர்லாந்தில் வசிக்கும் உறவினருடன் இணைந்துகொள்ள வரும் நபர்களுக்கும் இது பொருந்தும். புதிதாய் பிறந்த குழந்தைகளுக்கு அம்மாவின் மருத்துவக் காப்பீட்டு நிறுவனம் மூலமாக தானாகவே முதல் மூன்று காலத்துக்கு மருத்துவக் காப்பீடு வழங்கப்படும். மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள் ஒரு நபருக்கு அடிப்படை மருத்துவக் காப்பீட்டை வழங்க ஒப்புக்கொள்வது ஒரு சட்டத் தேவையாகும். கிறவ்புன்டன் Graubünden மாகாணத்திலுள்ள மருத்துவர்கள் மற்றும் அரசாங்க மருத்துவமனைகளால் செய்யப்படும் சிகிச்சைக்கான செலவுகளை அடிப்படை காப்பீடு ஏற்றுக்கொள்கிறது. அதில் கழிவுத் தொகையும் உள்ளது, அதாவது, மருத்துவர் மற்றும்/அல்லது மருத்துவமனையின் மருத்துவக் கட்டணங்களின் பகுதியளவு தொகை நோயாளியால் செலுத்தப்பட வேண்டும். கழிவுத் தொகையின் அளவு தனிநபரைச் சார்ந்து தீர்மானிக்கப்படலாம் மற்றும் மாதாந்திர சுகாதாரக் காப்பீட்டு பிரீமியங்களின் தொகையும் இதைத் தீர்மானிக்கக்கூடும்.

பல் சம்பந்தமான சிகிச்சைச் செலவுகளை மருத்துவக் காப்பீட்டு நிறுவனம் ஏற்காது! பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள் வழங்கும் காப்பீடுப் பலன்கள் மற்றும் அவற்றுக்கான கட்டணங்கள் பற்றிய விவரங்களை பின்வரும் இணையதளங்களில் காணலாம்

www.priminfo.ch
www.comparis.ch

## மருத்துவக் காப்பீட்டுக் கட்டணத்தில் தள்ளுபடி

குறைந்த பொருளாதார வசதி கொண்ட நபர்கள் கட்டாய மருத்துவக் காப்பீட்டுக்காக, அரசிடம் இருந்து நிதி உதவி பெறலாம். இந்த உதவி "Individuelle Prämienverbilligung" காப்பீட்டுக் கட்டணத்தில் தனிநபர் தள்ளுபடி எனப்படுகிறது.

**Sozialversicherungsanstalt Graubünden SVA**
கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் சமூகக் காப்பீட்டு நிறுவனம்

✆ 081 257 41 11
www.sva.gr.ch

## விபத்துக் காப்பீடு

ஒரு வாரத்துக்கு குறைந்தபட்சம் 8 மணி நேரமாவது பணி செய்யும் நபர்களுக்கு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் விபத்துக் காப்பீடு செய்யப்படுகிறது. வாரத்துக்கு 8 மணி நேரத்துக்கும் குறைவாகப் பணி செய்பவர்கள், பணியில் இல்லாதவர்கள் அல்லது சுயதொழில் புரிவோர், மருத்துவக் காப்பீட்டு நிறுவனத்தில் தாங்களாகவே விபத்துக் காப்பீடு செய்துகொள்ள வேண்டும்.

## சுயவிருப்பக் காப்பீடுகள்

- மேலதிக மருத்துவக் காப்பீடு
- மூன்றாம் நபர் பொறுப்புக் காப்பீடு மூன்றாம் நபர் சம்பந்தப்பட்ட சேதம் அல்லது

இழப்புக்கு, பொதுவாக வாடகைக்கு விடப்படும் கட்டிடங்களின் உரிமையாளர்கள் மற்றும் கட்டிட மேலாண்மை நிறுவனங்களை சேர்ந்தவர்கள் இதைத் தேர்வு செய்கின்றனர்

. வீட்டு உபயோகப் பொருட்கள் காப்பீடு
. வருமான இழப்புக்கு எதிராகக் காப்பீடு
. சட்டச் செலவுகளுக்கான காப்பீடு
. மேலும் பலவகைக் காப்பீடுகள்

எல்லா காப்பீடுகளுக்கும் பொதுவாக கழிவுகள் உள்ளன, அதாவது காப்பீடு கோரும் தொகைக்கான செலவை சம்பந்தப்பட்ட நபரே ஏற்க வேண்டும்.

பல சுவிஸ் காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீடுகளை வழங்குகின்றன. இதற்கான தனிப்பட்ட இணையதளங்கள் பின்வருமாறு

சுதந்திரமான இணையத்தளம் www.comparis.ch தகவல்களை வழங்குவதுடன், ஒப்பீடுசெய்தல் மற்றும் வசதிகள், காப்புறுதிகளை இணையவழி ஊடாக பல மொழிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

www.comparis.ch

தகவல்கள், ஒப்பீடுகள் மற்றும் இணையத்தளங்களில் நேரடியாக காப்பீடு கோருவதற்கான வாய்ப்புகள் பற்றி இந்த இணையதளங்கள் பல மொழிகளில் அளிக்கின்றன.

உங்கள் சொந்த நாட்டில் எடுக்கப்பட்ட காப்பீடுகள் சுவிட்சர்லாந்திலும் செல்லுபடியாகும் வாய்ப்புகள் உள்ளன.

# வரிகள்

சுவிட்சர்லாந்தில், தனிநபர்கள் வருமானம் மற்றும் சொத்து வரியைச் செலுத்த வேண்டும். இந்த வரியில் இருந்து அரசு, மாகாணம் மற்றும் நகராட்சிகளின் பொதுப் பணிகளுக்கான செலவுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

## நிரந்தர வசிப்பிட உரிமை உள்ள நபர்கள் சி உரிமம்

செலுத்த வேண்டிய வரித் தொகையைக் கணக்கிடுவதற்கு, சுவிட்சர்லாந்து குடிமக்கள் மற்றும் நிரந்தர வசிப்பிட அனுமதி பெற்றவர்கள் ஒவ்வொரு ஆண்டும் வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகும். நீங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள வருமான வரி அலுவலகத்தில் வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

## பிற வசிப்பிட அனுமதிகள் வைத்திருக்கும் நபர்கள்

நிரந்தர வசிப்பிட உரிமை இல்லாத வெளிநாட்டு ஊழியர்களுக்கு, அவர்களின் சம்பளம் கூலியில் இருந்து வரிகள் நேரடியாக பிடித்தம் செய்யப்படும் வருமான ஆதாரத்தில் நேரடி வரி. இது பின்வருபவர்களுக்கும் பொருந்தும்

- வருடாந்த அனுமதி வைத்திருக்கும் வெளிநாட்டவர்
- வாராந்த அனுமதி வைத்திருக்கும் வெளிநாட்டவர்
- ஒரு குறைந்த காலத்துக்கான அனுமதி ஒன்றை வைத்திருக்கும் வெளிநாட்டவர்
- எல்லைக்கப்பால் இருந்து வரும் பயணிகள்
- தற்காலிகமாக ஒப்புக்கொள்ளப்பட்ட நபர்கள்
- புகலிடம் கோருபவர்கள்

**Steuerverwaltung des Kantons Graubünden**
கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் வரி நிர்வாகம்

✆ 081 257 21 21
www.stv.gr.ch

# சமூகக் கலந்தாய்வுச் சேவைகள் மற்றும் சமுதாய நன்மைகள்

பொருளாதாரம், சமுதாய உதவி, தனிநபர் மற்றும் குடும்பக் கலந்தாய்வில் கிறவ்புன்டன் Graubünden சமூகப் பாதுகாப்பு அலுவலகம் முக்கியப் பொறுப்பு வகிக்கிறது.

## தனிநபர் சமூகக் கலந்தாய்வு

தனிநபர் கலந்தாய்வுக்கு வட்டார சமூகச் சேவைகள் மையத்தின் பணியாளர்கள் பொறுப்பேற்கின்றனர். வட்டார சமூகச் சேவைகளுடன் கூடுதலாக குழந்தைப் பாதுகாப்பு, பாதிக்கப்பட்டோர் உதவி மற்றும் போதைக்கு அடிமையாதல் பிரச்சினைகளுக்கு சிறப்பு சமூகச் சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன. வட்டார மற்றும் சிறப்பு சமூகச் சேவைகள் பற்றிய தகவல்களை “முகவரிகள் மற்றும் தொடர்புகள் அத்தியாயத்தில் காணலாம்.

## பொருளாதார சமூக உதவி

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்கள் வாழ்க்கைக்கு தேவையானதை தாங்களாகவே சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்பது ஒரு அடிப்படைக் கொள்கை ஆகும். தற்காலிகமான அல்லது நீண்ட பொருளாதாரச் சிக்கல்கள் உள்ள, தங்கள் பிரச்சினைகளை தாங்களாகவே தீர்த்துகொள்ள முடியாத நபர்கள் சமூக நன்மைகளைக் கோரலாம். இதற்கு சம்பந்தப்பட்ட நபர் கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில் வசிப்பவராக இருக்க வேண்டியது அவசியமாகும்.

செல்லுபடியாகாத ஓய்வூதியம் மற்றும் நிதியுதவி வழங்கமுடியாத குடும்பம் அல்லது தனிநபர் போன்றவற்றுக்கு சட்டப்படியான நன்மைகளைக் கோர உரிமையில்லாத நபராக இருந்தால் மட்டுமே அவருக்கு சமுதாய நன்மைகள் வழங்கப்படும். ஒவ்வொரு சூழ்நிலையிலும் சமுதாய நன்மைகள் தனித்தனியாக கணக்கிடப்படும் மற்றும் அவை தனிப்பட்ட சூழ்நிலைகள், வாழ்க்கைச் செலவுகள், வருமான நிலைகள் மற்றும் உதவியின் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கும்.

மாகாண ஒதுக்கீடுகள் மற்றும் நகராட்சிகளின் பரிந்துரைகளுக்கும் சமுதாய நன்மைகள் குறித்த ஸ்விஸ் Swiss மாநாட்டின் வழிகாட்டுதல்களுக்கும் இணங்க இந்தக் கணக்கீடு செய்யப்படுகிறது. கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில் வழங்கப்பட வேண்டிய சமுதாய நன்மைகள் குறித்து நகராட்சிகள் முடிவு செய்கின்றன.

**Kantonales Sozialamt Graubünden**
கிறவ்புன்டன் Graubünden மாகாண சமூகப் பாதுகாப்பு அலுவலகம்

✆ 081 257 26 54
www.soa.gr.ch

# அன்றாட - சமூக வாழ்க்கை

## நகர வாழ்க்கை, கிராம வாழ்க்கை

நீங்கள் பங்கேற்கக்கூடிய அல்லது பார்வையாளராக இருக்கக்கூடிய திருவிழாக்கள் அல்லது கொண்டாட்டங்களை நகராட்சிகள் அல்லது கிராமங்கள் ஏற்பாடு செய்கின்றன. சக ஊழியர்கள், பரிச்சயமானவர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அண்டைவீட்டார்கள் ஆகியோரிடம் நீங்கள் தகவல்களை கேட்டு அறியலாம். விளையாட்டு மைதானங்கள், சமுதாய மையங்கள், நீச்சல் குளங்கள் போன்ற மக்கள் கூடும் இடங்களும் நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ளன. இவ்விடங்களில் நீங்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## சங்கங்கள் சமுதாயங்கள் மற்றும் மன்றங்கள்

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான எண்ணற்ற வசதிகளும் சங்கங்கள், சமுதாயங்கள் மற்றும் மன்றங்களும் உள்ளன.

சங்கங்கள், சமுதாயங்கள் மற்றும் மன்றங்கள் ஆகியவை அன்றாட வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கின்றன மற்றும் இவை மற்ற மக்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கின்றன. கால்பந்து மன்றங்கள், சதுரங்க மன்றங்கள், இசைச் சங்கங்கள், கலாசாரச் சங்கங்கள், அரசியல் சமுதாயங்கள், பெண்கள் மன்றங்கள் மற்றும் பல உள்ளன. தாய்-சேய் சீருடற்பயிற்சி "MuKi-Turnen", வயதானவர்களுக்கு சீருடற்பயிற்சி, பாடகர் குழுக்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சங்கங்கள் போன்ற சேவைகளும் உள்ளன. இந்த மன்றங்கள் மற்றும் சங்கங்களில் ஆர்வமுள்ள அனைத்து நபர்களும் சேர்ந்துக் கொள்ளலாம். சங்கங்கள், சமுதாயங்கள் மற்றும் மன்றங்கள் புதிய உறுப்பினர்களை வரவேற்கின்றன. பல்வேறு சலுகைகள் மற்றும் தொடர்பு விவரங்கள் பற்றி உங்கள் உள்ளூர் நகராட்சி நிர்வாகத்திடம் கேளுங்கள்.

## வெளிநாட்டவரின் சங்கங்கள் மற்றும் சமுதாயங்கள்

மாகாணத்தில் வெளிநாட்டவரின் சங்கங்கள் மற்றும் சமுதாயங்கள் பல எண்ணிக்கையில் உள்ளன. இது தொடர்பான கண்ணோட்டத்தை இங்கு பார்க்கலாம்

www.integration.gr.ch

## அருங்காட்சியங்கள் அரங்கங்கள் மற்றும் திரையரங்குகள்

சில நகராட்சிகளில் சிறிய மற்றும் பெரிய அருங்காட்சியங்கள், அரங்கங்கள் மற்றும் திரையரங்குகள் உள்ளன.

## பொருட்களை வாங்குதல்

திங்கள் முதல் வெள்ளி வரை, வழக்கமாக காலை 8.00 மணி முதல் மாலை 6.30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையிலும் கடைகள் திறந்திருக்கும். பெரும்பாலான கடைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட்டிருக்கும். திறந்திருக்கும் நேரம் பிராந்தியங்களுக்கு இடையே வேறுபடும்.

## வங்கிகள்

வழக்கமாக கடைகள் மூடப்படுவதற்கு முன் வங்கிகள் மூடப்பட்டுவிடும். பெரும்பாலான வங்கிகள் மாலை 5.00 மணி முதல் 5.30 மணிக்குள் மூடப்பட்டுவிடும். பெரும்பாலான வங்கிகள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.



## பொது விடுமுறை நாட்கள்

கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தில் பின்வரும் நாட்கள் பொது விடுமுறை நாட்களாகும். இந்த நாட்களில் கடைகள் மூடப்பட்டிருக்கும். இதற்கு முந்தைய நாள், கடைகள் வழக்கமாக முன்னதாகவே மூடப்பட்டுவிடும், பல கடைகள் மாலை 5 மணிக்கு மூடப்படும்.

புத்தாண்டு தினம் - 1 ஜனவரி
புனித வெள்ளி, ஈஸ்டர் ஞாயிறு மற்றும் ஈஸ்டர் திங்கள்
இயேசுவின் விண்ணேற்றம்
விட் சண்டே Whit Sunday மற்றும் விட் மண்டே Whit Monday
தேசிய விடுமுறை - 1 ஆகஸ்ட்
பெடரல் பாஸ்ட் ஞாயிறு
கிறிஸ்துமஸ் தினம் - 25 டிசம்பர்
கிறிஸ்துமஸ் தினம் - 26 டிசம்பர்

பிராந்தியங்கள் மற்றும் வட்டாரங்களுக்குரிய மற்ற பொது விடுமுறை நாட்களும் உள்ளன. இது தொடர்பான கண்ணோட்டத்தை

www.feiertage-schweiz.ch

என்ற இணையத்தளத்தில் பார்க்கலாம்.

## சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு

சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான உதவிக்குறிப்புகளை சுற்றுலா அலுவலகங்களில் அல்லது

www.graubuenden.ch

என்ற இணையத்தளத்தில் பெறலாம்.

# இடம் பெயர்தல்

## பொதுப் போக்குவரத்து: இரயில் மற்றும் பேருந்து

சுவிட்சர்லாந்தில் சிறப்பாக மேம்படுத்தப்பட்ட இரயில் மற்றும் பேருந்து வலையமைப்பு உள்ளது. நேர அட்டவணைகள் மற்றும் வழித்தட வரைபடங்களை இவற்றில் பார்க்கலாம்

**Rhätische Bahn – RhB**
கிறவ்புன்டனில் மட்டும்
www.rhb.ch

**Postauto**
www.postauto.ch/graubuenden

**Schweizerische Bundesbahnen – SBB**
www.sbb.ch

SBB மற்றும் RhB ஆகியவை பொதுப் போக்குவரத்து பயன்பாட்டை மலிவு விலையாக்கும் பல்வேறு பயண அட்டைகளை உதாரணத்திற்கு பாதி விலை பயண அட்டை Halbtax, பொதுப் பயண அட்டை GA, மாதாந்திர பயண அட்டை Monatsabo, க்லெய்ஸ் seven25-Abo, ஜனியர் பயண அட்டை Juniorkarte அளிக்கிறது.
ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் இலவசமாக பெரியவர்களுடன் பயணிக்கலாம். மேலும் தகவல்கள் அனைத்து இரயில் நிலைய கவுண்டர்களிலும் கிடைக்கும் அல்லது

www.rhb.ch
www.sbb.ch

## சுவிட்சர்லாந்தில் கார் ஓட்டுதல்

### ஓட்டுநர் உரிமம்

சுவிட்சர்லாந்தில் வசிப்பிட அனுமதியைப் பெறுகின்ற வெளிநாட்டு ஓட்டுநர் உரிமத்தைக் கொண்டிருப்பவர்கள் ஒரு வருடத்திற்குள் தங்கள் ஓட்டுநர் உரிமத்தை சுவிஸ் நாட்டு ஓட்டுநர் உரிமத்திற்கு மாற்றிக் கொள்ள வேண்டும். அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பொறுத்து நிபந்தனைகள் மாறுபடும்.

**Strassenverkehrsamt des Kantons Graubünden**
கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் சாலைப் போக்குவரத்து உரிமை வழங்கல் துறை

✆ 081 257 80 00
www.stva.gr.ch

### வேகக் கட்டுப்பாடு

பின்வரும் வேகக் கட்டுப்பாடுகள் சுவிட்சர்லாந்திற்குப் பொருந்துகின்றன: பெருநகரங்கள், நகரங்கள் மற்றும் கிராமங்களுக்குள் 50 km/h, பெருநகரங்கள், நகரங்கள், மற்றும் கிராமங்களுக்கு வெளியே 80 km/h, மோட்டார்வே-களில் 120 km/h. பெருநகரங்கள், நகரங்கள், மற்றும் கிராமங்களில் 30 km/h அல்லது 20 km/h என்கிற வேகக் கட்டுப்பாடுகள் கொண்ட பகுதிகளும் உள்ளன.

### வாகனம் ஓட்டும்போது மது அருந்துதல் மற்றும் போதை மருந்து பயன்படுத்துதல்

அல்கஹோல் மதுசாரத்தின் எல்லை அளவு 0,5 ‰. புதிதாக வாகனம் செலுத்த ஆரம்பிப்பவர்கள் மற்றும் சாரதித் தொழிலை செய்பவர்களுக்கு 0.1 ‰. போதைவஸ்துப் பாவனையின் அளவிற்கு எவ்வித விட்டுக்கொடுப்பும் இல்லை.


-charl

### மோட்டார்வே Autobahnvignette

சுவிட்சர்லாந்தில் மோட்டார்வேகளில் வாகனம் ஓட்டுவதற்கு, நீங்கள் மோட்டார்வே Autobahnvignette காட்ட வேண்டும். இதனை ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்க வேண்டும். மோட்டார்வே Autobahnvignette பெட்ரோல் நிலையங்கள் மற்றும் தபால் அலுவலகங்களில் வாங்கிக் கொள்ளலாம்.

**Strassenverkehrsamt des Kantons Graubünden**
கிறவ்புன்டன் Graubünden மாகாணத்தின் சாலைப் போக்குவரத்து உரிமை வழங்கல் துறை

✆ 081 257 80 00
www.stva.gr.ch

### மிதிவண்டி

சுவிட்சர்லாந்தில், மிகவும் பிரபலமான வாகனம் மிதிவண்டியாகும். இது அன்றாட போக்குவரத்து முறையாகும். மிதிவண்டி ஓட்டுநராக நீங்கள் ஏதாவது சேதத்தை ஏற்படுத்தினால் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள மூன்றாம் நபர் பொறுப்புக் காப்பீட்டை எடுப்பது நல்லது.

# சுற்றுச்சூழல்

## சுற்றுச்சூழலை பாதுகாக்கவும்!

பெட்ரோல், மின்சாரம் மற்றும் தண்ணீரை சேமிப்பதன் மூலம் மற்றும் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் அனைவரும் பங்கு வகிக்கலாம்.

## கழிவு

ஒரு அடிப்படைக் கொள்கையாக, கழிவுகளை அப்புறப்படுத்துதல் என்பது கட்டணத்துக்குட்பட்ட சேவையாகும். நீங்கள் வசிக்குமிடத்தின் நிர்வாகத்திடமிருந்து எது, எப்போது, எங்கு அப்புறப்படுத்தப்படுகிறது என்பதைப் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெறலாம்.

## கழிவுகளைப் பிரித்தல்

கழிவுகளைப் பிரித்து அப்புறப்படுத்துதல் என்பது சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பளிக்கும் மற்றும் செலவுகளைக் குறைக்கும். பின்வருபவை வீட்டுக் கழிவுகளில் இருந்து பிரிக்கப்படுபவையாகும்.

. கண்ணாடி மற்றும் குவளைகள்
. காகிதம் மற்றும் அட்டை
. தோட்ட குப்பை மற்றும் கிறிஸ்துமஸ் மரங்கள்
. பெரிய கழிவுகள் எடுத்துக்காட்டாக, மரச்சாமான், தரைவிரிப்புகள் மற்றும் இரும்பு
. பற்றரிகள் மற்றும் மின்சார சாதனங்கள்
. மருந்துப் பொருட்கள்
. எண்ணெய்கள் மற்றும் பெயிண்டுகள், வார்னிஷ்கள், பாதரசம் போன்ற நச்சுப் பொருட்கள் முதலியன
. அணியக்கூடிய நிலையிலுள்ள துணிமணிகள்

கண்ணாடி, அலுமினியம், PET போன்றவற்றை கொள்கலன் சேகரிப்பு மையங்கள் அல்லது மறுசுழற்சி நிலையங்களில் அப்புறப்படுத்தலாம். பெரிய கழிவு, காகிதம், அட்டை மற்றும் பிரத்யேகக் கழிவு ஆகியவற்றை மறுசுழற்சி நிலையங்கள் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு சில சூழ்நிலைகளில் கட்டணம் விதிக்கின்றன.

பல கடைகள் பற்றரிகள் மற்றும் மின்சார சாதனங்களை இலவசமாக திரும்பப் பெற்றுக் கொள்கின்றன.

கழிவு மற்றும் மறுசுழற்சி பற்றிய விரிவான தகவல்களை இதில் பார்க்கலாம்

www.abfall.ch

## குடிநீர்

ஸ்விட்சர்லாந்தில், குழாயிலிருந்து வரும் தண்ணீர் உயர்தர குடிநீராகும். மேலும் தகவல்களை இதிலிருந்து பெறலாம்

**Bundesamt für Umwelt BAFU**
சுற்றுச்சூழலுக்கான மத்திய அரசு அலுவலகம்

✆ 058 462 93 11,
www.bafu.admin.ch



# பயன்தரும் முகவரிகள் மற்றும் இணையத் தொடர்புகள்


| | |
|---|---|
| நாளாந்த வாழ்வுப் பிரச்சினைகள் | 53 |
| தொழில | 53 |
| ஒதுக்குதல்.ஃ.இனவெறி | 53 |
| குடும்பம் மற்றும் உறவுமுறைகள் | 54 |
| நிதியுதவிகள் | 54 |
| உடல் நலம் | 55 |
| வன்முறை/பாதிக்கப்பட்டோருக்கான உதவி | 57 |
| ஒத்துழைத்து முன்னேற்றுதல்/குடியேறுதல் | 58 |
| பல்கலாச்சார மொழிபெயர்ப்பாளர் | 58 |
| பிள்ளைகள் மற்றும் இளையோர் | 58 |
| குடியேற்றவாசிகளின் ஊடகங்கள் | 60 |
| சமூக சேவைகள் | 60 |
| மொழிப் பள்ளிகள் | 61 |
| சட்டம | 62 |

## நாளாந்த வாழ்வுப் பிரச்சினைகள்

**Dargebotene Hand**
தொலைபேசி, சாட் அல்லது மின்னஞ்சல் மூலமாக பிரச்னையான வாழ்க்கை சூழ்நிலைகளில் உதவிக் கை வழங்கும் அமைப்பு ஆதரவு அளிக்கிறது. இது எந்தவிதமான மதம், கலாசாரம் அல்லது அரசியல் பற்றிணைவு கொண்டதல்ல.

✆ 143
www.143.ch

## தொழில்

**Amt für Industrie, Gewerbe und Arbeit GR**
தொழிற்சாலை, வணிக மற்றும் தொழில் திணைக்களம்

பிரதேச தொழில் அறியத்தரும் நிலையம் குறித்த தகவல்கள் இ தொழில் இழந்தவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு, சட்டரீதியான அடிப்படை விதிகள் மற்றும் பல.

✆ 081 257 23 46
www.kiga.gr.ch

**Amt für Berufsbildung GR**
தொழிற்கல்வித் திணைக்களம

தொழில், உயர்கல்வி- மற்றும் எதிர்கால ஆலோசனை குறித்த தகவல்கள்

✆ 081 257 27 68
www.afb.gr.ch

**Staatsekretariat für Bildung, Forschung und Innovation**
கல்வி, ஆய்வு மற்றும் புதுப்பித்தலுக்கான அரச செயலர்

வெளிநாட்டு டிப்ளோமாக்களை அங்கீகரிப்பது குறித்த கேள்விகளுக்கான தேசிய தொடர்பு நிலையம்.

✆ 058 462 28 26
www.sbfi.admin.ch

## ஒதுக்குதல்/இனவெறி

**Beratungsnetz für Rassismus-Opfer**
இனவெறியால் பாதிக்கப்பட்டோருக்கான கருத்துரை வழங்கும் வலையமைப்பு

www.stopprassismus.ch

**Eidgenössische Kommission gegen Rassismus**
இனவெறிக்கு எதிரான மத்திய அரசு ஆணையம்

www.ekr.admin.ch

**Informationszentrum Integration Graubünden**
ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம

✉ Grabenstrasse 1, 7001 Chur
✆ 081 257 36 83
www.integration.gr.ch

**TikK – Kompetenzzentrum für interkulturelle Konflikte**
பல்கலாச்சார முரண்பாடுகளுக்கான தகுதிவாய்ந்த நடுநிலையம்

பல்கலாச்சார முரண்பாடுகள், ஒதுக்குதல்கள், வன்முறை மற்றும் இனவெறி குறித்து இலவசமான மற்றும் அடையாளம் தெரியாத ஆலோசனை பல மொழிகளில்.

✆ 044 291 65 75
www.tikk.ch

## குடும்பம் மற்றும் உறவுமுறைகள்

**Adebar – Fachstelle für sexuelle Gesundheit und Familienplanung GR**
பாலியல் சுகாதாரம் மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டுக்கான நிபுணத்துவ நிலையம்

குடும்பக் கட்டுப்பாடு, பாலியல், கர்ப்பம் மற்றும் உறவுமுறை ஆகியவற்றிலுள்ள பிரச்னைகளுக்கு ஆலோசனை வழங்குகிறது.

✉ Sennensteinstrasse 5, 7000 Chur
✆ 081 250 34 38
www.adebar-gr.ch

**Verbund der Beratungsstellen für binationale Paare und Familien Schweiz**
சுவிஸ் இருமொழி சோடிகள் மற்றும் குடும்பங்களுக்கான ஆலோசனை நிலையங்களின் ஒன்றியம்

இரு நாடுகளைச் சேர்ந்த மற்றும் வெவ்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த தம்பதிகள் மற்றும் குடும்பங்களுக்கான தகவல்கள்.

www.binational.ch

**Paarlando. Paar- und Lebensberatung GR**
தம்பதிகள்- மற்றும் வாழ்க்கைமுறைக்கான ஆலோசனை

✉ Familienzentrum Planaterra,
Reichsgasse 25, 7000 Chur
✆ 081 252 33 77
www.paarlando.ch

## நிதியுதவிகள்

**Beratungsstelle für Schuldenfragen**
கடன் விவகாரங்களுக்கான ஆலோசனை மையம்

✉ Schweizerisches Rotes Kreuz GR,
Steinbockstrasse 2, 7000 Chur
✆ 081 258 45 80
www.srk-gr.ch

**Dachverband Budgetberatung Schweiz**
சுவிஸ் பட்ஜெட் ஆலோசனை தாய்சங்கம்

கடனை மறுசீரமைக்க ஆதரவளிக்கிறது மற்றும் கடன் சிக்கலில் இருந்து விடுபடவும் வழிகளைக் காட்டுகிறது.

www.budgetberatung.ch

**Caritas Schuldenberatung**
"கறிராஸ்" இன் கடனாளிகளுக்கான ஆலோசனை

பணம், வரவுசெலவுத்திட்டமிடல் மற்றும் கடன்கள் போன்ற விடயங்களுடன் தொடர்புள்ள சகல பிரயோசமுள்ள தகவல்களும் பல்வேறு மொழிகளில்.

www.caritas-schuldenberatung.ch

**Fachstelle Budgetberatung**
துறைசார் வரவு செலவுத்திட்ட ஆலோசனை

✉ Frauenzentrale GR,
Gürtelstrasse 24, 7000 Chur
✆ 081 284 80 77
www.beratungszentrum-gr.ch

## உடல் நலம்

**Aids-Hilfe GR**
எயிட்ஸ்-உதவி

HIV/எய்ட்ஸ் மற்றும் உடலுறவு மூலமாகப் பரவும் நோய்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கான மையம் - ஹெச்ஐவி-யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்றும் இடர் சூழ்நிலைக்குப் பிறகு நம்பிக்கை இழந்திருப்பவர்களுக்கு ஆலோசனை வழங்குகிறது.

✉ Lürlibadstrasse 15, 7000 Chur
✆ 081 252 49 00
www.aidshilfe-gr.ch

**AA Anonyme Alkoholiker**
குடிப்பழக்கத்தை கைவிட விரும்பும் அனைவரையும் AA வரவேற்கிறது. உங்கள் பெயர் வெளியிடப்படாது என்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

✆ 0848 848 885 (24 h)
www.anonyme-alkoholiker.ch

**Beratungsstelle Blaues Kreuz GR**
ப்ளூ க்ராஸ் ஆலோசனை மையம்

மது அருந்துதல் தொடர்பான பிரச்னைகளுக்கான தனிநபர் ஆலோசனை மற்றும் சுய உதவி குழுக்கள், மேலும் உறவினர்களுக்காகவும்.

✉ Alexanderstrasse 42, 7000 Chur
✆ 081 252 43 37
www.blaueskreuz.gr.ch

**Bisch fit?**
நீ நலமாக இருக்கிறாயா?

சுகாதார ஊக்குவிப்பு மற்றும் முற்பாதுகாப்புக் குறித்த Graubünden சுகாதாரத் திணைக்களத்தின் தகவல்தளம்

www.bischfit.ch

**Krebsliga GR**
அவதிப்படுபவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு சுய உதவிக்கான உதவியை அளிக்கிறது் சமூகப் பாதுகாப்புப் பிரச்னைகளுக்கு ஆலோசனை கூறுகிறது, பயிற்சி வகுப்புகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு ஏற்பாடு செய்கிறது.

✉ Ottoplatz 1, 7000 Chur
✆ 081 300 50 90
www.graubuenden.krebsliga.ch

**migesplus.ch**
பல மொழிகளில் உடல் நலம் மற்றும் ஸ்விஸ் மருத்துவ முறை பற்றிய தகவல்கள்.

www.migesplus.ch

**Netzwerk gegen Mädchenbeschneidung Schweiz**
சுவிசில் பெண்குறிவெட்டுதலுக்கு எதிரான வலைத்தொடர்பு

"பெண்குறி வெட்டுதல்" குறித்த பல மொழிகளிலான இணையப்பக்கத் தகவல்கள் அத்துடன் தகவல் நிலையங்களின் விபரங்கள்.

www.maedchenbeschneidung.ch

**Psychiatrische Dienste Graubünden**
கிறவ்புன்டன் Graubünden மனநோய்ச் சிகிச்சை சேவைகள்

✆ 058 225 25 25
www.pdgr.ch

**Procap Grischun**
குறைபாடு உள்ள மனிதர்களுக்கான சுயஉதவி அமைப்பு

ஊனமுற்றோருக்கான நிதி ஆலோசனை சமூகப் பாதுகாப்பு பிரச்னைகளுக்கான சட்டபூர்வமான ஆலோசனை.

✉ Hartbertstrasse 10, 7000 Chur
✆ 081 253 07 07
www.procapgrischun.ch

**Sexual health info**
பாலியல் உடல் நலம் பற்றிய தகவல்

பாலியல் உடல்நலம் பற்றிய விடயங்கள் பற்றிய துறைசார் உதவியுடன்கூடிய தகவல்கள் பல்வேறு மொழிகளில்.

www.sex-i.ch

**Suchtberatung**
(போதைக்கு) அடிமையானவர்களுக்கான ஆலோசனை

பிராந்திய சமூகசேவை நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கும் பரந்தளவில் (போதைக்கு) அடிமையானவர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றன. உங்களுக்கு கேள்விகள் அல்லது இது தொடர்பான கவலைகளிருக்குமாயின் பிராந்திய சமூகசேவை நிறுவனங்களை அணுகுங்கள்.

✆ 081 257 26 54
www.soa.gr.ch

**Spitex Verband GR**
உடல் நலக் குறைபாடுகளின் போது வீட்டில் செவிலிப் பணி மற்றும் வீட்டுச் சேவைகள் மட்டுமட்டுமல்லாமல் ஆதரவு மற்றும் ஆலோசனை அளிக்கப்படுகிறது

✉ Gartenweg 2, 7000 Chur
✆ 081 252 77 22
www.spitexgr.ch

## கிறவ்புன்டனில் Graubünden உள்ள மருத்துவமனைகள்

**Kreuzspital** மற்றும் **Frauenklinik Fontana** ஆகிய இரண்டு தளங்களுடன் உள்ள **Kantonsspital Graubünden Chur**
கிறவ்புன்டன் Graubünden கூர் மாகாண மருத்துவமனை

✆ 081 254 81 11

**Spital Thusis**

✆ 081 256 61 11

**Kreisspital Surses, Savognin**
மருத்துவமனை முதியோர் மற்றும் நலம் பேணகம்

✆ 081 669 14 00

**Ospidal Engiadina Bassa, Scuol**

✆ 081 861 10 00

**Ospidal Val Müstair, Sta. Maria**

✆ 081 851 61 00

**Regionalspital Prättigau, Schiers**

✆ 081 308 08 08

**Regionalspital Surselva, Ilanz**

✆ 081 926 51 11

**Spital Davos**

✆ 081 414 88 88

**Spital Oberengadin, Samedan**

✆ 081 851 81 11

### Ospedale Casa di Cura della Bregaglia, Promontogno

✆ 081 838 11 99

### Ospedale San Sisto, Poschiavo

✆ 081 839 11 11

## வன்முறை/ பாதிக்கப்பட்டோருக்கான உதவி

### Beratungsstelle für Gewalt ausübende Personen GR

GR உள்ள வன்முறையைப் பிரயோகிக்கும் நபர்களுக்கான ஆலோசனை நிலையம்

துறைசார் நிபுணர்கள் ஆலோசனை பெறவருபவர்களுடன் வன்முறையின்றி முரண்பாடுகளுக்கு தீர்வு காணல் தொடர்பாக பணியாற்றுகின்றனர். இவ் ஆலோசனைச் சலுகையானது தொலைபேசியூடாக ஆலோசனை வழங்கல் மற்றும் தனிநபர் ஆலோசனை, நெருக்கடிகளின்பொழுது தலையிடல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

✆ 079 544 38 63
www.gewaltberatung.gr.ch

### Frauenhaus GR

பெண்கள் இல்லம்

உடல்ரீதியான மற்றும் உளவியல்ரீதியான கொடுமைகள் ஏற்பட்டால் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பளிக்கிறது. இரவும் பகலும் இந்த எண்ணைத் தொடர்புக் கொள்ளலாம்.

✆ 081 252 38 02
www.frauenhaus-graubuenden.ch

### Opferhilfe-Beratungsstelle GR

க்ராவ்புண்டன் பாதிக்கப்பட்டோர் ஆலோசனைக்கான மையம

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ, உளவியல் சார்ந்த, சமூக, நிதி மற்றும் சட்ட உதவியை அளிக்கிறது. உடல்ரீதியாக, உளவியல்ரீதியாக மற்றும் பாலியல் ஒருங்கிணைப்பில் குறைபாடு உள்ள மக்களுக்கும், குற்றத்தின் விளைவால் குடும்ப உறுப்பினர்களை இழந்து தவிப்பவர்களுக்கும் உதவி அளிக்கப்படுகிறது. அவசர சூழ்நிலைகளின் போது இந்தச் சேவையை 24 மணிநேரமும் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ளலாம். இந்த ஆலோசனையை இலவசமாகப் பெறலாம் மற்றும் அழைப்பவர் பெயர் வெளியிடப்படாது.

✉ Klostergasse 5, 7000 Chur
✆ 081 257 31 50
www.soa.gr.ch

### TERRE DES FEMMES

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தொலைபேசியூடாக அல்லது மின்னஞ்சல் மூலமாக பல மொழிகளில் ஆலோசனையும் ஒத்துழைப்பும்.

✆ 031 331 66 90
www.terre-des-femmes.ch

## ஒத்துழைத்து முன்னேற்றுதல்/ குடியேறுதல்

**Amt für Migration und Zivilrecht GR**
குடியேற்றம் மற்றும் சிவில் உரிமைத் திணைக்களம

உள்ளே பயணித்தல், தங்கியிருத்தல், பதியும் நடைமுறைகள், குடும்பத்துடன் சேர்தல், பிரஜாவுரிமை பெறுதல் போன்றவை குறித்த தகவல்கள்.

✆ 081 257 30 01
www.afm.gr.ch

**Informationszentrum Integration Graubünden**
ஒத்துழைத்து முன்னேற்றும் தகவல் நடுநிலையம

ஒத்துழைத்து முன்னேற்றும் விடயங்கள் குறித்த அனைத்துக் கேள்விகளுக்குமான தொடர்பு நிலையம். அத்துடன் இலவசமான மொழி ஆலோசனை வசதிகள்.

✉ Grabenstrasse 1, 7001 Chur
✆ 081 257 36 83
www.integration.gr.ch

சுவிசில் வாழ்வது குறித்து பல மொழிகளிலான தகவல் தளம்
www.hallo.gr.ch
www.ch.ch
www.migraweb.ch
www.swissworld.org

**Staatssekretariat für Migration**
குடிபெயர்வுக்கான அரசசெயலகம்

உள்ளே பயணித்தல், தங்கியிருத்தல், தொழில் அனுமதிகள், ஒத்துழைத்து முன்னேறுதல் மற்றும் பிரஜாவுரிமை பெறுதல்.

www.sem.admin.ch

## பல்கலாச்சார மொழிபெயர்ப்பாளர்

தகுதிபெற்ற மொழிபெயர்ப்பாளர்களின் முன்னேற்பாடு

**Arge Verdi – Interkulturelles Dolmetschen in der Ostschweiz**
கிழக்கு சுவிசில் பல்கலாச்சாரம் அறிந்த மொழிபெயர்ப்பாளர் அமைப்பு

✆ 0848 28 33 90
www.arge.ch/verdi

**Telefondolmetschdienst**
தொலைபேசி மொழிபெயர்புச் சேவை

✆ 0842 442 442
www.0842-442-442.ch

## பிள்ளைகள் மற்றும் இளையோர்

**Elternberatung GR**
பெற்றோர் ஆலோசனை

குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளின் பெற்றோர்களுக்கான ஆலோசனை. உங்கள் பிரதேசத்திலுள்ள வசதிகள் குறித்து உங்கள் நகரசபையில் நீங்கள் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

**Elternbildung GR**
பெற்றோர்களுக்கான கல்வி

வளர்ப்புமுறை விடயங்கள் குறித்த பெற்றோர்களுக்கான கல்வி வசதி.

www.elternbildung-gr.ch

**Heilpädagogischer Dienst GR**
க்ராவ்புண்டன் குறைதீர் கல்விச் சேவைகளுக்கான அறக்கட்டளை

பிறப்பு முதல் பள்ளி வயது வரையிலான ஊனமுற்ற மற்றும் வளர்ச்சிக் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகளுக்கான தனிநபர் மதிப்பீடு மற்றும் ஊக்குவிப்பு. குழந்தைகளை வளர்க்கும் முறை பற்றி பெற்றோருக்கு ஆலோசனை அளித்தல்.

✉ Aquasanastrasse 12, 7000 Chur
✆ 081 257 02 80
www.hpd-gr.ch

இளையோர் மற்றும் ஊடகங்கள் – ஊடக நம்பிக்கையை ஊக்குவிக்கும் தகவல் தளம்

டிஜிற்றல் ஊடகங்களை பாதுகாப்பாகக் கையாள்வது குறித்த முக்கிய எடுத்துக்காட்டுகள் அடங்கிய கைநூல். 16 மொழிகளில்.

www.jugendundmedien.ch

**Kinder- und Jugendpsychiatrie GR**
க்ராவ்புண்டன் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான மனநோய்ச் சிகிச்சை

உளவியல் சார்ந்த பிரச்னைகள் மற்றும் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு ஆதரவளிக்கிறது.

✉ Masanserstrasse 14, 7000 Chur
✆ 058 225 19 19
www.kjp-gr.ch

4 வயது வரையான பிள்ளைகளுக்கான கற்கும் சந்தர்ப்பங்கள்

பெற்றோர் எவ்வாறு தமது சிறுபிள்ளைகளை நாளாந்த நிலைமைகளில் ஊக்குவிப்பது குறித்த எடுத்துக்காட்டுகள் மற்றும் விளக்கங்கள் அடங்கிய 60க்கும் மேலான குடும்படங்கள். 13 மொழிகளில் காணலாம்.

www.kinder-4.ch

**lilli**
அனைத்துவிதமான பாலியல் சுகாதாரம் மற்றும் வன்முறை முற்பாதுகாப்பு விடயங்கள் குறித்து இளையோர்கள் மற்றும் இளம் வயதுவந்தோருக்கான தகவல்கள்

www.lilli.ch

**Pro Juventute** பெற்றோர் ஆலோசனை

வளர்ப்பு, விருத்தியடைதல், பராமரிப்பு மற்றும் குடும்ப ஒழுங்கமைப்பு குறித்த இலவச ஆலோசனை. பகலிலும் இரவிலும் தொடர்பு கொள்ள முடியும்.

✆ 058 261 61 61
www.projuventute.ch

**Pro Juventute** பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான ஆலோசனை

பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான ஆலோசனை, நம்பிக்கையாக, இலவசமாக மற்றும் எந்த நேரத்திலும்.

✆ 147
www.147.ch

**Sorgentelefon für Kinder**
குழந்தைகளுக்கான உதவி அழைப்பு எண்

✆ 0800 55 42 10 (கட்டணமில்லா சேவை)
www.sorgentelefon.ch

**tschau.ch**
தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு வாழ்க்கை மற்றும் நெருக்கடி பற்றிய கலந்தாய்வு.

www.tschau.ch

## குடியேற்றவாசிகளின் ஊடகங்கள்

பல்வேறு எண்ணிக்கையான ஊடகங்கள் சுவிஸ் குடியேற்றவாசிகள் குறித்து செய்திகளை வெளியிடுகின்றன. இது குறித்த பார்வையை நீங்கள் கீழே காணலாம்

www.migesmedia.ch

## சமூக சேவைகள்

### வட்டார சமூகச் சேவைகள்

**Chur**

✉ Rohanstrasse 5, 7000 Chur
✆ 081 257 26 67

**Prättigau/Herrschaft/Fünf Dörfer, Landquart**

✉ Bahnhofplatz 3B, 7302 Landquart
✆ 081 257 66 23

**Mittelbünden, Thusis**

✉ Rathaus, Untere Gasse 3,7430 Thusis
✆ 081 257 52 75

**Surselva, Ilanz**

✉ Bahnhofstrasse 31, 7130 Ilanz
✆ 081 257 62 30

**Surselva, Disentis/Mustér**

✉ Via Sursilvana 25, 7180 Disentis/Mustér
✆ 081 257 62 30

**Oberengadin/Bergell, Samedan**

✉ A l'En 2, 7503 Samedan
✆ 081 257 49 10

**Unterengadin/Münstertal, Scuol**

✉ Chasa du Parc, 7550 Scuol
✆ 081 257 64 32

**Bernina, Poschiavo**

✉ Via dal Poz 87, 7742 Poschiavo
✆ 081 257 49 11

**Moesa, Roveredo**

✉ Centro regionale dei servizi,
Cima Piazza Piaza, 6535 Roveredo
✆ 081 257 65 70

### நகராட்சி சமூக சேவைகள்

**Sozialdienst der Landschaft Davos**
✉ Berglistutz 1, 7270 Davos Platz
✆ 081 414 31 10

## மொழிப் பள்ளிகள்

### Chur

**ibW Höhere Fachschule Südostschweiz, Chur**

✆ 081 403 33 33
www.ibw.ch
. ஸ்பானிஷ், பிரெஞ்சு, அரபி சீனம், கிரேக்கம், ஜப்பானி, ஆங்கிலம், இத்தாலி

**Klubschule Migros, Chur**

✆ 058 712 44 40
www.klubschule.ch
. ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, ஸ்பானிஷ், அரபி, பிரேசிலிய மொழி, சீனம், கிரேக்கம், ஜப்பானி, டச்சு மொழி, போர்ச்சுகீஸ், ரஷிய மொழி

**Lernforum, Chur**

✆ 081 353 63 62
www.lernforum.ch
. ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, ஸ்பானிஷ், கிரேகிஸ், போர்ச்சுகீஸ், ரஷிய மொழி, ஜப்பானி

**Lia Rumantscha, Chur**

✆ 081 258 32 22
www.liarumantscha.ch
. ரோமானிஸ் மொழி

**Balikatan, Chur**

✆ 079 781 32 00
www.balikatan.ch
. கீழ்-தொடக்கநிலை ஜெர்மன்மொழி பயிற்சி வகுப்புகள்

### Hinterrhein

**Schule St. Catharina, Cazis**

✆ 081 632 10 00
www.stcatharina.ch
. கீழ்-தொடக்கநிலை ஜெர்மன்மொழி பயிற்சி வகுப்புகள்

### Engadin

**Academia Engiadina, Samedan**

✆ 081 851 06 00
www.academia-engiadina.ch
. ஜெர்மன், ஆங்கிலம், இத்தாலி, ரோமானிஸ் மொழி, ரஷிய மொழி, ஸ்பானிஷ்

**Kaufmännische Berufsschule, Samedan**

✆ 081 852 49 55
www.berufsschule-samedan.ch
. ஜெர்மனி, ஆங்கிலம், இத்தாலி, பிரெஞ்சு

### Davos/Prättigau

**Berufsschule der Landschaft Davos**

✆ 081 413 75 17
www.berufsschuledavos.ch
. ஜெர்மன், ஆங்கிலம், இத்தாலி

**Grischlingua, Davos**

✆ 081 416 40 44
www.grischlingua.ch
. ஜெர்மன், ஆங்கிலம்

## Surselva

**Faviala, Ilanz**

✆ 079 689 60 79
www.faviala.ch
. ஆங்கிலம், இத்தாலி, ரோமானிஸ் மொழி

மத்திய, மாநில அரசாங்கத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு ஜெர்மனிய, இத்தாலிய மற்றும் ரோமானிஸ் மொழிப் பயிற்சி வழங்கப்படுகிறது. மொழிப் பயிற்சி வகுப்புகளை இங்கு காணலாம்

www.integration.gr.ch

## சட்டம

**Unentgeltliche Rechtsberatung**
இலவச சட்ட உதவி

க்ராவ்புண்டன் (Graubünden) மாகாணத்தில் உள்ள பல்வேறு இடங்களில், க்ராவ்புண்டன் (Graubünden) வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் கட்டணப் பங்களிப்பு CHF 10.00 -க்கு சட்ட ஆலோசனை வழங்குவார்கள். இந்த ஆலோசனை சேவைகளிலிருந்து நீங்கள் எங்கு, எப்போது பலன் பெறலாம் என்பது பற்றிய தகவல்களை இந்த இணையத்தளத்தில் வெளியிடப்படும் மாகாண அரசிதழ்கள் மற்றும் செய்தித்தாள்களில் பார்க்கலாம்.

www.grav.ch

**Frauenzentrale Graubünden**
வித்தியாசமான சட்ட விடயங்கள் குறித்த தனிப்பட்ட ஆலோசனை

✉ Gürtelstrasse 24, 7001 Chur
✆ 081 284 80 77
www.beratungszentrum-gr.ch

## சங்கங்கள்

நீங்கள் ஒரு சங்கத்தைச் சேர்ந்தவராக இருந்தால், நீங்கள் இதன் மூலம் ஊதியம் மற்றும் பணிச் சூழ்நிலைகளைப் பற்றிய இலவச சட்ட ஆலோசனையைப் பெறுவீர்கள்.

www.die-gewerkschaften.ch



Alp Buffalora
Munt la Schera
Alp la Schera
Il Fuorn
Alp Sprella
Döss Radond
Tschuccai
Sta. Maria
Nationalpark Panoramaweg
45
20 min
2 ¼
3 ¼
Alp Buffalora
Alp la Schera
Punt la Drossa
Minieras da fier
Pass dal Fuorn

# 21

# ஒரு அவசர நிலையில் என்ன செய்வது

## சுவிட்சர்லாந்துக்கான அவசரகால தொலைபேசி எண்கள் வாரத்தின் அனைத்து நாளும் 24 மணிநேரமும் தொடர்புக் கொள்ளலாம்

| | |
|---|---|
| காவல் துறை | 117 |
| தீயணைப்புப் படை தீ, தண்ணீர், வாயு | 118 |
| ஆம்புலன்ஸ | 144 |
| அவசரகால தொலைபேசி எண் காவல் துறை, தீயணைப்புப் படை, ஆம்புலன்ஸ | 112 |
| சுவிஸ் விமான மீட்பு REGA மீட்பு ஹெலிகாப்டர் | 1414 |
| நஞ்சேற்றம் நஞ்சியல் தகவல் மையம | 145 |
| குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான தொலைபேசி உதவி | 147 |

## ஒரு அவசரகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நன்னடத்தைக் கோட்பாடு

. அமைதியாக இருங்கள்
. அந்த சூழ்நிலையை திறனாய்வு செய்யுங்கள் என்ன நடந்துள்ளது? யாரெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளனர்?
. அபாயத்தை அடையாளம் காணுங்கள்
. உங்களை, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை மற்றும் இதில் சம்பந்தப்பட்டுள்ள மற்ற தரப்பினர்களைப் பாதுகாத்திடுங்கள்
. அவசரகால சேவைகளை அழையுங்கள் 144 அல்லது 112
. முதலுதவி அளியுங்கள்

## அவசரகால மருத்துவ உதவி - அவசரகால தொலைபேசி எண் 144 அல்லது 112

உங்கள் அழைப்பை தகுதிபெற்ற டிஸ்பாச்சர் எடுப்பார். செய்தியைப் பொறுத்து, அவசியமான அனைத்து அவசரகால சேவைகளும் ஆம்புலன்ஸ், மருத்துவர், மீட்பு ஹெலிகாப்டர், காவல் துறை மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கு உடனடியாக எச்சரிக்கப்படும்.

144 அல்லது 112 என்கிற தொலைபேசி எண்ணை பொது தொலைபேசிகள், மற்றும் வீட்டுதொலைபேசி, மொபைல் இணைப்புகள் மூலம் இலவசமாகவும் ஏரியா கோடு உள்ளிடாமலும் அழைக்கலாம்.

## அவசரகால சேவைகள் ஸ்விட்ச்போர்டிற்கு பின்வரும் தகவல்கள் அவசியமாகும்

. உங்களைத் திரும்ப அழைக்க தேவைப்படும் நிகழ்வுகளில் உங்கள் பெயர் மற்றும் உங்கள் தொலைபேசி எண்.
. என்ன நடந்தது என்பது பற்றிய சுருக்கமான விவரிப்பு.
. விபத்து நடைபெற்ற இடம் பற்றிய துல்லியமான விவரங்கள். இடம், தெரு, வீட்டு எண்.
. எத்தனை நோயாளிகள் இருக்கின்றனர்.
. நோயாளியின் நிலை: அவருக்கு நினைவு உள்ளதா? நோயாளி சுவாசிக்கிறாரா?
. இந்த சம்பவம் எப்போது நடந்தது?

டிஸ்பாச்சர் உகந்த நடவடிக்கைகளைத் துவங்கிவிட்டார் என்று உறுதி செய்யும் வரை அழைப்பை முடித்துவிடாதீர்கள்.

வெளியிடுபவர்
Amt für Migration und Zivilrecht
Graubünden (AFM)
Fachstelle Integration
Grabenstrasse 1
CH-7001 Chur
✆ 081 257 26 38
www.integration.gr.ch
www.hallo.gr.ch

வரைபட எண்ணக்கரு மற்றும் வடிவமைப்பு
Moinz Kreativbüro, www.moinz.ch

© புகைப்படங்கள்
பக்கம் 8: Caroline Staeger
பக்கம் 16, 27, 31, 36, 51: Andrea Badrutt, www.andreabadrutt.ch
பக்கம 18: miaEngiadina / Andrea Badrutt
பக்கம 23: Rhätische Bahn / Andrea Badrutt
பக்கம 45, 48, 63: TSSVM / Andrea Badrutt

வெளியீடு 2020

Albanisch, albanais, albanese
Arabisch, arab, arabo
Bosnisch, bosniaque, bosniaco / Kroatisch, croate, croato / Serbisch, serbe, serbo
Dari, dari, dari
Deutsch, tudestg, tedesco
Englisch, englais, inglese
Filipino, filippino, filippino
Französisch, franzos, francese
Italienisch, talian, italiano
Kurmandschi, kurmandschi, kurmanji
Portugiesisch, portugais, portoghese
Russisch, russ, russo
Somalisch, somali, somalo
Spanisch, spagnol, spagnolo
**Tamilisch, tamil, tamil**
Thai, thai, thai
Tibetisch, tibetan, tibetano
Tigrinya, tigrinya, tigrino
Türkisch, tirc, turco

இத்தளத்தில் தரவிறக்கம் செய்யவும் www.integration.gr.ch
மேலதிக தகவல்களை பல மொழிகள் இணையத்தளமான
www.hallo.gr.ch இல் நீங்கள் காணலாம்

KIP
KANTONALES
INTEGRATIONSPROGRAMM
KANTON GRAUBÜNDEN